Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, OCTOBER 6, 2021

புதன்கிழமை, 6 ஒக்டோபர் 2021 | ஒளி: 07 கதிர் 119 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## சிறுவர்களை புலிகள் கொல்லவில்லையா?

■ பா.நிரோஸ்

இலங்கை இராணுவத்தால் பாலச்சந்திரன் உள்ளிட்ட சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் குறிப்பிடுகையில், தமிழீழ விடுதலை புலிகளால் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் சிறுவர்கள் சாகவில்லையா என ஆளுந்தரப்பினர் கேள்வி எழுப்பினார்.

தொடர்ச்சி P2

## 8 தமிழ் அரசியல் கைதிகளுக்கு பாதுகாப்பு வழங்கவும்

### ரிட் மனுவை ஆராய்ந்த உயர்நீதிமன்றம் உத்தரவு



இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தேக்கு எதிராக மனு தாக்கல் செய்துள்ள 8 கைதிகளுக்கும் போதியளவு பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உயர்நீதிமன்றம் நேற்று (05) உத்தரவிட்டது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் இருக்கும் எட்டு தமிழ் அரசியல் கைதிகளின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை நேற்ற (05) ஆராய்ந்த போதே, உயர்நீதிமன்றம் மேற்கண்டவாறு கட்டளையிட்டது. சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு ஆலோசனை வழங்குமாறு சட்ட மா அதிபருக்கு உயர் நீதிமன்றம் கட்டளையிட்டது.

தொடர்ச்சி P2

## மாகாண பாடசாலைகள் ஒக்.21 மீள ஆரம்பம்



கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக மூடப்பட்டிருக்கும் பாடசாலைகளை கட்டம் கட்டமாக திறப்பது தொடர்பில் கல்வியமைச்சு ஆராய்ந்து வருகின்றது.

இந்நிலையில், ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதியன்று மாகாண சபைகளின் கீழியங்கும் பாடசாலைகளைத் திறப்பதற்கு மாகாண ஆளுநர்களின் அமையம் இணக்கம் தெரிவித்துள்ளது என மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகே தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளுக்கு கீழியங்கும் 200 மாணவர்களை குறைவாகக் கொண்ட பாடசாலைகளை மீளத் திறப்பதற்கு மாகாண ஆளுநர்கள் தீர்மானித்துள்ளனர்.

ஆனாலும், 3000 ஆரம்ப பாடசாலைகளை விரைவில் திறப்பது தொடர்பிலேயே கல்வியமைச்சு கவனம் செலுத்திவருகின்றது.

தொடர்ச்சி P2

### 25 ஆயிரம் ரூபாவை இலஞ்ச பெற்ற

## அரச அதிகாரி கையும் களவுமாக சிக்கினார்

■ வ.சக்தி, கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, கஜுவாஞ்சிக்குடி பிரதேச சபையின் வருமான வரி மேற்பார்வையாளர் ஒருவர், பிரதேச சபையில் வைத்து இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரிகளால் நேற்று (05) கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



# 13இல் பலம் கண்டு செயற்படவேண்டும்

### ஷ்ரிங்லாவிடம் ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு



அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் பலவீனங்களைப் போன்றே அதில் காணப்படும் பலம் தொடர்பிலும் கண்டறிந்துச் செயற்படுவதன் தேவை தொடர்பிலும் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவுக்கு எடுத்துரைத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சீனாவுடனான தொடர்பில் எவ்வித சந்தேகமும் கொள்ளவேண்டாம் என கேட்டுக்கொண்டார்.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு, ஜனாதிபதி மாளிகையில் நேற்று (05) நடைபெற்றது. இதன்போதே, மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

இணக்கப்பாடுகளுடன் எட்டப்படும் இருதரப்புத் தீர்மானங்களை,

தொடர்ச்சி P2

## ஆசிரியர் தினம்; கறுப்பு தினம்

சர்வதேச ஆசிரியர் தினமான இன்றைய நாளை, கறுப்பு தினமாக பிரகடனப்படுத்தி, நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கு இலங்கை அதிபர்- ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட கல்விசார் ஊழியர்கள் சம்பள முரண்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுத் தருமாறு கடந்த 24 வருடங்களாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். எனினும், பிரச்சினைகளைத் தீர்க்காது, அரசாங்கம் காலங்கடத்தி வரும் நிலையிலேயே தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

### முடக்கத்துக்குப் பின்னர்

## 'புதிய தொற்று குறைகிறது'

■ வா.கிருஷ்ணா



முடக்கத்துக்குப் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிய தொற்றாளர்கள் வெகுவாகக் குறைந்து வருகின்றனர் என மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் நா.மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று (05) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மனசாட்சிக்கு துரோகம் செய்யக் கூடாது

கத்தோலிக்கச் சபையானது, மக்கள் பக்கமே இருக்கவேண்டுமே அன்றி ஆட்சியாளர்கள் பக்கமோ தனவந்தர்களது பக்கமோ இல்லை என தெரிவித்துள்ள பேராயர் ரஞ்சித் மெல்கம் ஆண்டகை, அற்ப ஆதாயத்துக்காக மனசாட்சிக்கு துரோகம் செய்யக் கூடாது என்றார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் (4) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர்,

தொடர்ச்சி P2

## 'ஊக்கி' தடுப்பூசி



கொரோனா தொற்று ஒழிப்புக்கான ஊக்கி (Booster Shot) தடுப்பூசியை ஏற்றுவது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் தனது பரிந்துரையை வழங்கியுள்ளது.

65 வயதுக்கும் மேற்பட்டவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள்,

தொடர்ச்சி P2

## அமெரிக்க கனவில் மிதப்பவர்கள் நாட்டை துண்டாடுகின்றனர்



எமது நாட்டின் பொருளாதார உபாயமார்க்கங்கள் என்றவகையில் முக்கியமான உயிர்நிலைகளை வெளிநாட்டுப் பலவான்களுக்குத் தொடர்ந்தும் கையளிக்கின்ற முயற்சியை நாங்கள் தோற்கடிக்க வேண்டுமென அழைப்பு விடுத்துள்ள ஜே.வி.பி, அமெரிக்காவில் வசிப்பதற்கு கனவு காண்கின்ற ஆட்சியாளர்கள் நாட்டை மீண்டும் குடியேற்றமாக மாற்றிவருகின்றனர் என்றது.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று (05) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி, மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

தொடர்ச்சி P2

## பென்டோரா பேப்பர்ஸால் ராஜபக்ஷ குடும்பமே நனைந்துவிட்டது




எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மழையில் நனைந்தவாறு விவசாயிகளுடன் உரையாடும் படத்தை அரச ஊடகங்களில் காட்டி நிருபமா ராஜபக்ஷவின் தவறுகளை இந்த அரசாங்கம் மறைக்கப்பார்ப்பதாகத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, ஆனால் இன்று பென்டோரா பேப்பர்ஸால் ராஜபக்ஷகுடும்பமே நனைந்துள்ளது என்றார்.

எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (5) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

தொடர்ச்சி P2

## தாத்தாவின் அங்கலாய்ப்பு எமது பிள்ளைகளுக்கு இல்லை



அமெரிக்காவுக்கு சென்றிருந்த ஜனாதிபதி அங்கு தனது பேரப்பிள்ளையை கொஞ்சி தூக்கி மகிழ்ந்ததை சமூகவலைத்தளத்தில் பதிவிட்டிருந்தார். காணாமலாக்கப்பட்ட எமது பிள்ளைகளின் தந்தைகள் தற்போதும் கண்ணீரோடு தமது பிள்ளைகளைத் தேடி வருகிறனர் எனத் தெரிவித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்.

தொடர்ச்சி P2

## ஆசிரியர்களின் போராட்டம் கவலைக்குரியது



ஆசிரியர்- அதிபர் சேவையில் நிலவும் பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கம் அமைச்சரவை மட்டத்தில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்த காணி அமைச்சர் எஸ். எம். சந்திரசேன, முன்வை க்கப்பட்டுள்ள தீர்வுகளை இவர்கள் ஏற்க மறுத்து, இன்று முன்னெடு க்கப்படவுள்ள போராட்டம் தொடர்பில் கவலையடைவதாகத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஊவாவில் 434 பாடசாலைகள் 21ஆம் திகதி ஆரம்பம்

மாகாண சபைகளினால் நிர்வகிக்கப்படும் 200 மாணவர்களுக்குக் குறைவான ஆரம்பப் பாடசாலைகளைக் கல்வி நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் 21ஆம் திகதி முதல் திறக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தெரிவித்துள்ளார்.

ஒன்லைன் தொழினுட்பத்தின் ஊடாக நடைபெற்ற மாகாண ஆளுநர்களின் கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. குறித்த தீர்மானத்திற்கு அமைவாக ஊவா மாகாணத்தில் 200

தொடர்ச்சி P2

### தற்கொலைதாரியின் உடற்பாகங்களை புதைத்தமையை எதிர்த்து

## ஆர்ப்பாட்டம் செய்தவர்களுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

■ வா.கிருஷ்ணா



2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறுத் தினத்தன்று, மட்டக்களப்பு, சீயோன் தேவாலயத்தில் தாக்குதல் நடத்திய தற்கொலை குண்டுதாரியின் உடற்பாகங்களை இந்து மயானத்தில் புதைத்தமைக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் உள்ளிட்ட ஐவருக்கு எதிரான வழக்கு விசாரணை, நவம்பர் 10ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## இந்திய மீனவர்கள் கற்கடதீவில் அட்டகாசம்

■ என்.ராஜ்

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த இந்திய இழுவை மீன்பிடி படகொன்று, குருநகர் பகுதி மீனவப் படகை நேராக மோதி சேதப்படுத்தியதோடு,

தொடர்ச்சி P2





PAGE 1 தொடர்ச்சிகள்

# 8 தமிழ் அரசியல் கைதிகளுக்கு பாதுகாப்பு வழங்கவும்

அநுராதபுரம் சிறைச்சாலைக்கு செப்டெம்பர் 12 ஆம் திகதியன்று வருகைதந்திருந்த சிறைச்சாலைகள் மற்றும் புனரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே, துப்பாக்கி முனையில் கொலை மிரட்டல் விடுத்தார் என, அச்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பூபாலசிங்கம் சூரியபாலன் உள்ளிட்ட 8 கைதிகள் மனு தாக்கல் செய்துள்ளனர்.

தாம் உள்ளிட்ட சில கைதிகளை சிறைக்கூடத்தில் இருந்து, அன்றையதினம் வெளியில் அழைத்து கொலை மிரட்டல் விடுத்தமையினூடாக தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக அறிவிக்குமாறு மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த அடிப்படை உரிமை மனுக்கள் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, மூர்து பெர்னாண்டோ மற்றும் எஸ். துரைராஜா உள்ளிட்ட நீதியரசர் குழாம் முன்னிலையில் நேற்று (05) பரிசீலிக்கப்பட்டன.

மனுக்கள் தொடர்பிலான எழுத்துமூல ஆட்சேபனையை எதிர்வரும் 14 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சட்ட மா அதிபர் உள்ளிட்ட பிரதிவாதி தரப்பு மற்றும் மனுதாரர் தரப்புக்கு உத்தரவிட்ட நீதியரசர் குழாம், வழக்கை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே, நீதியமைச்சர் அலி சப்ரி, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகர் எச்.ஆர். அஜித் உள்ளிட்டோர் வழக்கின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தங்களுடைய சட்டத்தரணி மொஹான் பாலேந்திரன் ஊடாக செப்டெம்பர் 30ஆம் திகதியன்று தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், சட்டத்தரணி கேசவன் சயந்தன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

லொஹான் ரத்வத்த, வெலிக்கடை சிறைக்கு 12 ஆம் திகதியும் அநுராதபுரம் சிறைக்கு 6 ஆம் திகதியும் சென்றிருந்தார். கடுமையான அழுத்தங்களுக்கு பின்னர், சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சர் பதவியை அவர், 15 ஆம் திகதியன்று இராஜினாமா செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறுவர்களை புலிகள் கொல்லவில்லையா?

பாராளுமன்றத்தின் நேற்றைய (05) விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஸ்ரீதரன் எம்.பி, இம்மாதம் முதலாம் திகதி சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது. அன்றைய தினமே இலங்கை அரசாங்கத்தால் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் 25ஆவது அகவை நாளும் ஆகும் என்றார்.

பிரபாகரனின் இளைய மகன் என்கிற ஒற்றைக் காரணத்தினாலேயே 12 வயதுடைய பாலச்சந்திரனை அரசாங்கம் படுகொலை செய்தது.

# அரச அதிகாரி கையும் களவுமாக சிக்கினார்

கஞுவாஞ்சிக்குடி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர், காணியொன்றில் வீடு கட்டுவதற்கான அனுமதி பத்திரம் வழங்குவதற்காக அவரிடமிருந்து 25,000 ரூபாயை இலஞ்சமாக பிரதேச சபையில் கடமையாற்றிவரும் வருமான வரி மேற்பார்வையாளர் கோரியதையடுத்து, இது தொடர்பாக அந்நபர் ஆணைக்குழுவினருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து, ஆணைக்குழுவின் ஆலோசனையின் பிரகாரம், சம்பவதினமான நேற்று நண்பகல் பகல் பிரதேச சபையில் வைத்து வரிவருமான வரி மேற்பார்வையாளருக்கு அந்நபர் இலஞ்சமாக 25,000 ரூபாயை வழங்கியபோது, அங்கிருந்த ஆணைக்குழுவின் அதிகாரிகள், உடனடியாக செயற்பட்டு, கையும் களவுமாக பிடித்து கைது செய்துள்ளனர்.

# 13 இல் பலம் கண்டு செயற்படவேண்டும்

இரு நாடுகளினது மக்களுக்கு சரியான முறையில் தெளிவுபடுத்தப்பட வேண்டுமென்று, ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

இந்து சமுத்திரத்தை சமாதான வலயமாக மாற்ற வேண்டுமென்று, பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க 1971இல் முன்வைத்த யோசனையைச் செயற்படுத்துவதற்கான பலத்தை அதிகரித்துக்கொள்ள, இந்தியாவின் உதவியை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தற்போது காணப்படும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை விரைவாக அடையாளம் காண்பதுடன், மீனவச் சமுதாயத்துக்குக் கிடைக்கவேண்டிய நன்மைகளைப் பெற்றுக்கொடுத்து, இரு நாடுகளினதும் மீனவர்கள் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க வேண்டியதன் அவசியத்தையும், ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

யாழ்ப்பாணக் கோட்டையை மீட்ட தனது அனுபவத்தை எடுத்துக்கூறிய ஜனாதிபதி காணாமற்போனோர், யுத்தம் காரணமாக கணவரை இழந்தோர் உள்ளிட்ட யுத்தத்தின் பக்க விளைவுகள் பற்றி, தான் நல்ல புரிதல் கொண்டிருப்பதாக எடுத்துரைத்தார்.

இலங்கையிலிருந்து சென்ற தமிழ் மக்களை மீண்டும் நாட்டுக்குத் திருப்பியழைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பது தனது எதிர்பார்ப்பென்று தெரிவித்த ஜனாதிபதி, அதற்காக அரசாங்கம் முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களை வெற்றிகரமானதாக்கிக்கொள்ள, ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத் தொடரின் போது உரையாற்றி, புலம்பெயர் தமிழர்களுக்கும் வெளிநாடுகளில் வசிக்கும் தமிழ் மக்களுக்கும் பகிரங்க அழைப்பு விடுத்ததாகவும், ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

வடக்கு  கிழக்கு அபிவிருத்திக்காகத் தனது அரசாங்கம் கடந்த காலங்களில் முன்னெடுத்திருந்த நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்திய ஜனாதிபதி , யுத்த காலத்தின் போது பாதுகாப்புத் தரப்பினரால் கைப்பற்றப்பட்டிருந்த காணிகளில் 90 சதவீதத்துக்கும் மேலானவை, அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்றும் கூறனார்.

காணாமற்போனோரது குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்த ஜனாதிபதி, யுத்தத்தால் ஏற்பட்ட ஏனைய பிரச்சினைகளுக்கும் உடன் தீர்வு வழங்குவதற்கான தேவை தொடர்பிலும் தெளிவுபடுத்தினார்.

இரு நாடுகளினதும் புவியியல் இருப்பிடம் தொடர்பில் தெளிவான புரிந்துணர்வு இருப்பின், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய எந்தவொரு செயற்பாட்டுக்கும் இலங்கையைப் பயன்படுத்திக்கொள்ள இடமளிக்கப் போவதில்லை என்றும், ஜனாதிபதி எடுத்துரைத்தார்

சீனாவுடனான தொடர்புகள் பற்றி மிகத் தெளிவாக எடுத்துரைத்த ஜனாதிபதி , அது தொடர்பில் எவ்வித சந்தேகமும் கொள்ள வேண்டாமென்று, இந்திய வெளிவிவகாரச் செயலாளரிடம் கேட்டுக்கொண்டார். அத்துடன், இலங்கையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அதனால், இந்திய முதலீட்டாளர்களுக்கு பகிரங்க அழைப்பு விடுத்தார்.

திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் தொடர்பான பிரச்சினையை, இரு நாடுகளுக்கும் பயனுள்ள வகையில் தீர்த்துக்கொள்ளும் பொறுப்பு, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இரு நாடுகளுக்கு இடையிலான சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பிலும், இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இலங்கையின் முப்படையினருக்கு, இந்தியாவில் வழங்கப்படும் பயிற்சிகளை விரிவாக்குவது தொடர்பிலும், இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

மின்சாரத்தை அதிகளவில் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களை அடையாளம் கண்டு, இரு நாடுகளுக்கிடையில் மின்சாரக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

கொவிட் தடுப்பூசி ஏற்றல் தொடர்பில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பாராட்டிய இந்திய வெளிவிவகாரச் செயலாளர், கொவிட் கட்டுப்பாட்டுக்கு இலங்கை முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் மகிழ்ச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதி அவர்களின் நீண்ட நேர தெளிவுபடுத்தல் தொடர்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ள இந்திய வெளிவிவகாரச் செயலாளர், இரு நாடுகளுக்கும் இடையிலான கருத்துக்கள் சமனாக இருப்பதால், இரு நாடுகளுக்கு இடையிலான நட்புணர்வைத் தொடர்ந்து முன்னோக்கிக் கொண்டுசெல்ல முடியுமென்றும் தெரிவித்தார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இந்தியப் பிரதமரை இலங்கைக்கு இராஜாங்க விஜயமொன்றை மேற்கொள்ள அழைப்பதாகவும், இந்திய வெளிவிவகாரச் செயலாளரிடம் ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாகாண பாடசாலைகள் ஒக்.21 மீள ஆரம்பம்

தரம் 1 தொடக்கம் 5 வரையான வகுப்புகளைக் கொண்ட 200 மாணவர்களுக்கும் குறைந்த அளவிலான மாணவர்கள் கல்விக் கற்கும் தூர பிரதேச பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக கல்வி அமைச்சு ஏற்கெனவே அறிவித்திருந்தது.

சுகாதார ஒழுங்கு விதிகளுக்கு முன்னுரிமை வழங்கி, பாடசாலைகளை மீள திறப்பதற்கான ஆரம்பகட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியர் தினம்; கறுப்பு தினம்

கடந்த 80 நாள்களுக்கு மேலாக அதிபர், ஆசிரியர்கள் நடாத்தி வரும் பணிபகிஷ்கரிப்பையும் கண்டுக் கொள்ளாத அரசாங்கம் சம்பள முரண்பாட்டுக்கான தீர்வை இதுவரை வழங்கவில்லை. எனவே சம்பள முரண்பாட்டிற்கான தீர்வினை உடன் பெற்றுத்தர வேண்டுமெனக் கோரியே அதிபர்- ஆசிரியர் இத்தினத்தில் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

கொவிட்- 19 கொரோனா தொற்றின் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக குறைந்த அளவிலானவர்களின் பங்குபற்றுதலோடு இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளன.

# ‘புதிய தொற்று குறைகிறது’

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 29 கொரோனா தொற்றாளர்களே இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் எந்தவித மரணங்களும் இடம்பெறவில்லை எனவும் இதுவரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 336 கொரோனா மரணங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதாகவும் 92 சதவீதமானவர்கள் முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டுள்ளனர் 85 சதவீதமானவர்கள் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்றார்.

# மனசாட்சிக்கு துரோகம் செய்யக் கூடாது

தற்போது எமது கத்தோலிக்க சமூகத்தினருக்கு பாதிப்பை ஏற்படுத்திய உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குள் அநியாயக்காரர்களால் நியாயத்தை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அங்கே அரசியல் செல்வாக்கு மற்றும் அரசியல் இலாபம் என்பன காரணமாக நீதி கிடைக்கவில்லை. இதுதான் முன்பிருந்து கூறியதைப் போன்று காபட்டுக்கு அடியில் போடும் நிலை உருவாகியுள்ளது.

சிறிய சிறிய இலாபம் பிரயோசனங்களுக்காக தமது மனசாட்சியைக் காட்டிக்கொடுக்க முடியாது என தெரிவித்த அவர், நீதி தமக்கு ஏற்றாற்போல மாற்றப்பட்டுள்ளதால் நீதி, நியாயத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை சமூக முறைமை இப்போது ஏற்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்கள் நியாயத்தைப் பெற்றுக்கொடுக்கும் வழிமுறை இன்று இல்லாமல் போயுள்ளது. அரசியல் இலாபம், அரசியல் செல்வாக்கு போன்ற காரணங்களால் இத்தாக்குதல் சம்பவத்தின் உண்மை மறைக்கும் நடவடிக்கை மாத்திரமே தற்போது முன்னெடுக்கப்படுகிறது என்றார்.

இன்று நாட்டில் மோசமான அரசியல் நிலை ஒன்று தோன்றியுள்ளது. இது 1970ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வந்துக்கொண்டிருக்கிறது. சுதந்திரத்துக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அனைத்து அரசாங்கங்களும் நீதியை அநீதியாக தொடர்ந்தன. இன்றும் அவ்வாறான நிலையே உள்ளன என்றார்.

# ‘ஊக்கி’ தடுப்பூசி

நீண்டநாள் நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்கள் மற்றும் சுகாதார தரப்பினர் உள்ளிட்ட முன்னுரிமை பட்டியலில் உள்ளவர்களுக்கு ஊக்கி தடுப்பூசியை ஏற்ற, உலக சுகாதார ஸ்தாபனம் இணக்கம் தெரிவித்துள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அதற்கமைய, ஊக்கி தடுப்பூசியை ஏற்றுவதற்கு தயாராகி வருவதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்தார்.

# ஊவாவில் 434 பாடசாலைகள் 21ஆம் திகதி ஆரம்பம்

மாணவர்களுக்குக் குறைவான 434 பாடசாலைகள் எதிர்வரும் 21ஆம் திகதி திறக்கப்படவுள்ள அதேவேளை, அதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

திறக்கப்படவுள்ள பாடசாலைகள் அமைந்துள்ள பிரதேசம் மற்றும் வலையத்துக்குப் பொறுப்பான அரசியல் பிரமுகர்கள் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்களுக்கு இது குறித்து அறிவிக்கப்படவுள்ள அதேவேளை, அவர்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்தாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

மேலும், பிரதேச செயலாளர்கள் மற்றும் அபிவிருத்தி அதிகாரிகளின் உதவிகள் தேவைப்படும் பட்சத்தில் அவர்களையும் இணைந்துகொள்ள மாவட்டச் செயலாளர்களுக்கு ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

பாடசாலைகளைத் திறக்கும் வேலைத்திட்டங்கள் அனைத்தும் சுகாதார ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை அமைவாக முன்னெடுக்குமாறு அறிவுரை.

# அமெரிக்க கனவில் மிதப்பவர்கள் நாட்டை துண்டாடுகின்றனர்

எந்தவொரு நாட்டுக்கும் பூலோபாயரீதியில் முக்கியத்துவம் வகிக்கின்ற பொருளாதார உயிர்நிலைகளையும் பொருளாதார வளங்களையும் பாதுகாத்துக்கொள்ளல் ஆட்சிக்கு வருகின்ற ஆட்சியாளர்களின் பொறுப்பாகும். நாங்கள் பிறக்கின்றபோது இருந்த நாட்டின் வளங்கள் இறக்கின்றபோது வெளிநாட்டவர்களுக்கு கையளிக்கப்பட்டிருப்பின் அது நாட்டுக்கு எவ்வளவு கவலைக்கிடமான நிலைமையை உருவாக்குகின்றது என்றும் கேள்வியெழுப்பினார்.

சீனா, இந்தியா மற்றும் அமெரிக்கா எமது நாடு சம்பந்தமாக பாரிய பொருளாதார மற்றும் அரசியல்ரீதியான இடையீடுகளைச் செய்துவருகின்றதென்பது தெளிவானதாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பென்டோரா பேப்பர்ஸால் ராஜபக்ஷ குடும்பமே நனைந்துவிட்டது

இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் பிரதி அமைச்சரான நிருபமா ராஜபக்ஷ யார் என்பதை தான் புதிதாக சொல்ல வேண்டியதில்லை. 2005-2015ஆம் ஆண்டு நீர்வழங்கள் பிரதி அமைச்சராக கடமையாற்றிய போது, பல மில்லியன் ரூபாய்களை இவர் முறையற்ற விதத்தில் சேகரித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சாதாரண பிரதி அமைச்சராக இருந்த அவர் எவ்வாறு இவ்வளவு சொத்துக்களை சம்பாதித்தார். இந்த பணம் யாருடையது? இது அவருடைய தனி வேலையா? இந்த சொத்துக்களுடன் வேறு எவருக்கும் தொடர்பிருக்கிறதா என தெரியவில்லை என்றார்.

இப்போது அரசாங்கம் இந்த விடயம் தொடர்பில் என்ன செய்யப்போகின்றது. இந்த விடயத்துடன் தொடர்புடைய ஏனைய நாட்டு தலைவர்கள் நடவடிக்கை எடுக்கத் தொடங்கிவிட்டனர்.

# ஆர்ப்பாட்டம் செய்தவர்களுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் இந்த வழக்கு நேற்று (05) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், இராஜாங்க அமைச்சரின் இணைப்புச் செயலாளர் யோ.ரொஸ்மன், முற்போக்குத் தமிழர் அமைப்பின் இளைஞர் ஒருங்கிணைப்பாளர் அனோஜன், மாநகர சபை உறுப்பினர்களான திருமதி செல்வி மனோகரன் மற்றும் அருள்தாஸ் சுசிகலா ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொண்ட காத்தான்குடியைச் சேர்ந்த தற்கொலை குண்டுதாரியான ஆசாத்தின் உடற்பாகங்களே கள்ளியன்காடு இந்து மயானத்தில் புதைக்கப்பட்டது.

# தாத்தாவின் அங்கலாய்ப்பு எமது பிள்ளைகளுக்கு இல்லை

இறுதி யுத்தக் காலத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட சிறுவர்கள் காணாமலாக்கப்பட்டுள்ளனர் என்றார்.

இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட சிறுவர்கள் காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் சர்வதேச விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (05) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், யுத்தக் காலத்தில் பாலச்சந்திரன் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இந்த படுகொலைகளுக்கு இதுவரையில் நீதிக்கிடைக்கவில்லை என்றார்.

# ஆசிரியர்களின் போராட்டம் கவலைக்குரியது

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று (5) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், குறுகிய அரசியல்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படும்போது சரியான தீர்வும் தவறானதாகவே தெரியும். நாட்டு மக்களின் நலனை கருத்திற்கொண்டு போராட்டங்களில் ஈடுப்பட வேண்டாம் என வலியுறுத்துகிறோம் என்றார்.

# இந்திய மீனவர்கள் கற்கடதீவில் அட்டகாசம்

படகில் இருந்த குருநகர் மீனவர்களை கடலில் தூக்கிப் போடும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர்.

5ஆம் திகதி நள்ளிரவு 12 மணியளவில், குருநகர் பகுதியில் இருந்து மீன்பிடி தொழிலுக்காக படகொன்றில் வந்த மூவர், நேற்று அதிகாலை 3 மணியளவில், இலங்கை - கற்கடதீவு கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.



## சந்திப்பு...

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் உறுப்பினர்கள் கொழும்பில் நேற்று முன்தினம் (04) சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

வெள்ளைப்பூண்டு மோசடி;

# ஆமாம் மோசடி இடம்பெற்றுள்ளது

■ பாதிரோஸ்

சதொச நிறுவனத்தில் வெள்ளைப்பூண்டு மோசடி இடம்பெற்றுள்ளதை ஏற்றுக்கொண்டுள்ள அரசாங்கம், இதுத் தொடர்பில் சி.ஐ.டியினர் உரிய விசாரணைகளை மேற்கொள்வதாகவும் சபைக்கு அறிவித்துள்ளது.

பாராளுமன்றத்தின் நேற்றைய (05) அமர்வில் கலந்துகொண்டு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் கேள்விக்குப் பதில் வழங்கும்போதே வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், சதொச நிறுவனத்தில் வெள்ளைப்பூண்டு தொடர்பில் பாரிய மோசடியொன்று இடம்பெற்றுள்ளதை திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்கிறோம் என்றார்.

சதொச நிறுவனத்தில் மோசடி இடம்பெறுவது இது முதல்முறையோ அல்லது கடைசி முறையோ அல்ல. சதொச நிறுவனத்தை எமது அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டபோது, 20 பில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.



அச்சுறுத்தல்களையோ அல்லது அழுத்தங்களையோ நாம் ஊடகவியலாளர்களுக்கு வழங்கவில்லை. வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பில் அறிக்கையிட்டிருந்த ஊடகவியலாளர்களிடமிருந்து சாட்சியங்களை பெற்றுக்கொள்ளவே அவர்களிடம் சி.ஐ.டியினர் விசாரணைகளை மேற்கொண்டிருந்தது. இந்த மோசடி தொடர்பில் விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தபால் நிலையப் பிரச்சினைகளை தீர்க்கும்போது

# வடக்குக்கு முன்னுரிமை



■ பாதிரோஸ்

வடமாகாண மக்களே இலங்கையில் தபால் நிலையங்கள் தொடர்பில் அதிகளவான பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதாக தெரிவிக்கும் வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும, எனவே வடக்கில் தபால் நிலையங்கள் தொடர்பில் அதிக வேலைத்திட்டங்கள் அவசியம் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்ற அமர்வில் நேற்று (05) கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், உண்மையில் இலங்கையில் வடக்கு மாகாண மக்களே தபால் நிலையப் பிரச்சினைகளால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். யுத்தம் முடிந்த பின்னர் அங்கு தபால் துறை அபிவிருத்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் அவர் இதன்போது கவலை வெளியிட்டார்.

கொரோனா வைரஸால் ஏற்பட்டுள்ள பொருளாதார தாக்கத்தால் புதிய கட்ட நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. எனினும் புதியக் கட்டங்கள் வழங்கப்படும்போது வட மாகாணத்துக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

# மஹிந்தானந்தவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா?

■ பாதிரோஸ்



2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்தை கூறிய முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரும் தற்போதைய அமைச்சருமான மஹிந்தானந்த அழுத்கமகேவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா? என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (05) அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், 2011ஆம் ஆண்டு உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி தோல்வியை தழுவியமைக்கு, இலங்கை அணி கட்டிக்கொடுக்கப்பட்டமையே காரணமென போட்டி நடைபெற்று 11 வருடங்களுக்குப் பின்னர் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் கூறியிருந்தார் என்றார்.

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரின் இந்த கருத்து, இலங்கை அணியில் காட்டிக்கொடுப்புகள் இடம்பெறுவதாக சர்வதே அளவில் பேசப்பட்டது. இதனை தொடர்ந்து முன்னாள் விளையாட்டுதுறை அமைச்சரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது.

அதுபோல இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்களான அர்ஜூன டி சில்வா, மஹேல ஜயவர்தன ஆகியோரிடமும் சி.ஐ.டியினர் விசாரணைகளை மேற்கொண்டனர். முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரின் இந்த கருத்து பாரதூரமானது என மஹேல ஜயவர்தனவும் கூறியிருந்தார் என்றார்.

சர்வதேச அளவில் நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் சர்ச்சைக்குரிய கருத்துக்களை கூறியிருந்த முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் வினவினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, கிரிக்கெட் போட்டிகளில் தவறுகள் இடம்பெற்றதாக சந்தேகிக்கும் எவரும் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் முறைப்பாடு செய்யலாம். இவ்வாறு முறைப்பாடு செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமாக இருந்தால், அதன் பின்னர் எவரும் முறைப்பாடுகளை வழங்கமாட்டார்கள் என்றார்.

உலகக் கிண்ண மோசடி;

# விசாரணைகளில் திருப்தியில்லை

■ பாதிரோஸ்



2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகள் தொடர்பில் நான் தெரிவித்திருந்த கருத்துக் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் திருப்தியடைய முடியாது என தெரிவிக்கும் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரான மஹிந்தானந்த அழுத்கமகே அமைச்சர், சூதாட்டங்களை நிறுத்தாவிட்டால், இலங்கைக் கிரிக்கெட் அணியால் ஒருபோதும் உலக கிண்ணத்தை வெல்லமுடியாது என்றார்.

இச்சம்பவம் தொடர்பில் 2011ஆம் ஆண்டு உலகக்கிண்ண போட்டிகள் நடைபெறும்போது இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர், செயலாளர், உலகக்கிண்ண முகாமையாளராக இருந்தவர்களிடம் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என சி.ஐ.டிக்கு வழங்கிய வாக்குமூலத்தில் நான் கூறியிருந்தேன்.

எனினும் அவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றார். இச்சம்பவத்தில் அப்போதிருந்த இலங்கைக் கிரிக்கெட் அணியின் வீரர்களுக்கு தொடர்பு இல்லை என நான் தெளிவாக கூறியிருந்தும், விசாரணை களை திசைதிருப்ப வேண்டுமென்றே முன்னாள் கிரிக்கெட் வீரர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன எனவும் தெரிவித்தார்.

"உங்களது அரசாங்க த்துக்கு கீழேயே சி.ஐ.டி இருக்கிறது. அவ்வாறு இருக்கும் பட்சத்தில் விசாரணைகளில் திருப்பதியில்லை என்கிறீர்கள். அப்படி என்றால் இதுத் தொடர்பில் மீண்டும் விசாரணைகளை மேற்கொள்ளலாமே" என ஒழுங்கு பிரச்சினை எழுப்பி உரையாற்றிய முஜிபூர் ரஹ்மான் எம்.பி தெரிவித்தார். இதற்குப் பதிலளித்த அமைச்சர் மஹிந்தானந்த, உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி தொடர்பில் நான் கூறியிருந்த கருத்தால் கடந்த பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் எனக்கு இரண்டாம் இடமே கிடைத்தது. இலங்கைக் கிரிக்கெட் அணியில் இடம்பெறும் சூதாட்டங்களை நிறுத்தவில்லை என்றால், இலங்கைக் கிரிக்கெட் அணியால் ஒருபோதும் உலகக் கிண்ணத்தை ஒருபோதும் வெற்றிபெற முடியாது.

# தொழிலாளர்களின் வேலை நாள்களை அதிகரிக்க வேண்டும்

■ பாதிரோஸ்

விற்பனை செய்யப்பட்ட சொத்துக்களை மீட்கப் போவதாக ஆட்சிக்கு வந்த அரசாங்கம், நாட்டில் விற்பதற்கு சொத்துக்களை இல்லாமல் செய்துள்ளதாக சாடிய பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேலை நாள்களை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (05) அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், அரசாங்கம் கொண்டுவரும் அனைத்துத் திட்டங்களும் தோல்வியிலேயே முடிவடைகிறது. 20ஆவது திருத்தச் சட்டம், மூன்றிலிரண்டு பெரும்பான்மை என அனைத்து பலத்தையும் கொண்ட அரசாங்கம் அரிசி ஆலை உரிமையாளர்களின் காலில் விழுந்து கேவலப்பட்டுவிட்டது எனவும் தெரிவித்தார்.

இரவோடு இரவாக நாட்டின் வளங்களை விற்பனை செய்ய தெரியும் அரசாங்கத்துக்கு அத்தியாவசிய பொருள்களை கட்டுப்பாட்டு விலைக்கு வழங்க தெரியவில்லை. அதேபோல உர இறக்குமதிக்கு தடை விதிக்க தெரிந்த அரசாங்கத்துக்கு தேயிலை, இரப்பர், தென்னை உள்ளிட்டப் பயிர்களுக்கு மாற்று உரத்தை வழங்க தெரியவில்லை எனவும் தெரிவித்தார்.

விற்கப்பட்ட சொத்துக்களை மீட்பதாக கூறி ஆட்சிக்கு வந்தார்கள். ஆனால் நாட்டில் விற்பதற்கு சொத்துக்களை இல்லாமல் ஆக்கியுள்ளனர். ஆயிரம் ரூபாய் சம்பள என்கிற அறிவிப்பை வெளியிட்டு, அரசாங்கம் நாடகமாடி ஒட்டுமொத்த தொழிலாளர்களையும் அடக்குமுறைக்குள் தள்ளியுள்ளனர் தெரிவித்தார்.

நிதி நிர்வாக சீர்கேட்டால் பொருளாதாரம் படுவீழ்ச்சியடைந்துள்ளது. டொலரின் விலை விமான வேகத்தில் அதிகரிக்கிறது. வர்த்தமானி அறிவித்தல் விடுவதையும் அதனை இரத்து செய்வதுமே அரசாங்கத்தின் வேடிக்கையாக இருக்கிறது. உர தட்டுப்பாடு காரணமாக தேயிலை உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதனால் தொழிலாளர்களின் வேலை நாட்களும் குறைவடைந்துள்ளது. இவ்வாறானப் பிரச்சினைகளால் தொழிலாளர்களுக்கும் தோட்ட நிர்வாகங்களுக்கும் இடையில் அதிக முரண்பாடுகள் காணப்படுகிறது. எனவே தொழிலாளர்களின் வேலை நாட்களை அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் இதன்போது அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

உயர் தர, சாதாரண தர

# பரீட்சைகள் இரண்டும் பிற்போடப்பட வேண்டும்

**தனிப்பட்ட கருத்து என்கிறார் சுசில்**

■ பாதிரோஸ்

கல்விப் பொதுத் தராதர உயர்தர மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளுக்கு குறிக்கப்பட்டுள்ள திகதிகளில் பரீட்சைகளை நடத்தாமல் காலந்தாழ்த்தி வைக்க வேண்டும் என்பதே தனது தனிப்பட்டக் கருத்து என கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு வாய்மூல விடைக்கான வினாவுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், 2020ஆம் ஆண்டு 210 பாடசாலை நாட்கள் காணப்பட்டன. ஆனால் வெறும் 65 நாட்களே மாணவர்கள் பாடசாலைக்கு சென்றிருந்தனர். குறிப்பாக இந்த வருடத்தில் மேல்மாகாணத்தில் 5 நாட்களே மாணவர்கள் பாடசாலைகளுக்கு சென்றிருந்தனர். ஏனைய மாகாணங்களில் குறைந்தது முதலாம் தவணை வரையிலாவது மாணவர்கள் பாடசாலைக்கு சென்றுள்ளனர் எனவும் தெரிவித்தார். இவ்வாறான நிலையில் கல்விப் பொதுத் தராதர உயர்தர, சாதாரண தரப் பரீட்சைகளை குறிக்கப்பட்டுள்ள திகதிகளில் நடத்தாமல் காலந்தாழ்த்தி வைக்க வேண்டும் என கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. அதுத் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்றார். எவ்வாறாயினும் இரு பரீட்சைகளும் பிற்போடப்பட்டு காலந்தாழ்த்தி வைக்கப்பட வேண்டும் என்பதே தனது தனிப்பட்டக் கருத்து எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

# வெள்ளைபூண்டை விசாரிக்காது ஏன்

**விசாரணைகளையும் கோருகிறது எதிர்க்கட்சி**

■ பாதிரோஸ்

வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பில் அரசாங்கம் ஏன் இதுவரையில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, இதுத் தொடர்பில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றைய (05) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், சதொச நிறுவனத்தில் இடம்பெற்றுள்ள பாரிய மோசடிகள் தொடர்பிலான தகவல்கள் வெளியாகியுள்ளன என்றும் தெரிவித்த அவர் விசாரணைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தினார்.


## கம்பஹா மாநகர சபை

**2022 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியில் இருந்து 2022 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலும், வாகனங்கள் நிறுத்தும் இடம், பொது மலசலக்கூடம், இறைச்சிக்கடை, யக்கல வாராந்த சந்தை மற்றும் மாநகர சபை சிற்றுண்டிச் சாலை ஆகியவற்றுக்கான விலைமனுக்கோரல்.**

2022 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியில் இருந்து 2022 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலும், வாகனங்கள் நிறுத்தும் இடம், பொது மலசலக்கூடம், இறைச்சிக்கடை, யக்கல வாராந்த சந்தை மற்றும் மாநகர சபை சிற்றுண்டிச் சாலை ஆகியவற்றின் வர்த்தக உரிமையை குத்தகைக்கு வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. விலைமனு விண்ணப்பத்திற்கான விலைமனு வைப்பு பணம் மற்றும் விலைமனு விண்ணப்பக் கட்டணம் ஆகியவற்றை செலுத்தி 2021.11.26 ஆம் திகதி வரையிலும் வார நாட்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரையிலும் விலைமனு விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ளமுடியும்.

சீல் வைக்கப்பட்ட விலைமனு விண்ணப்பத்தை 2021.11.27 ஆம் திகதி முற்பகல் 10:00 மணிவரையிலும் பொறுப்பேற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் அன்றையதினம், முற்பகல் 10:15 க்கு விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனு கோருவோர் அந்த நேரத்தில் பங்குபற்ற முடியும்.

தெரிவு செய்யப்பட்ட விலைமனுகாரர்களின் விலைமனு ஏற்றுக்கொள்ளப்பட்டது என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதன் பின்னர் 7 நாட்களுக்குள் 3 மாதத்துக்கான விலைமனு கூலியுடன் அரச வரிகளுடன் கூடிய வைப்பீட்டு பணத்தை ஒரே தடவையில் செலுத்தி, ஒப்பந்தத்துடன் இணையவேண்டும். மூன்று மாதங்களுக்கான வைப்பீட்டு பணத்தை ஒரே தடவையில் செலுத்தமுடியாமல் போனும் விலைமனு கோருவோருக்கு விலைமனு வழங்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களை 033-4942296 அல்லது 033-4942283 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்துகொள்ளமுடியும்.

| இல | இடம் தொடர்பிலான விபரம் | விலைமனு கோரல் விண்ணப்பக் கட்டணம் | விலைமனு வைப்பீடு பணம் ரூபாய் (மீளக் வழங்கப்படும்) | வருடாந்த ஆகக் குறைந்த ஏலத்தொகை |
|---|---|---|---|---|
| | **இறைச்சிக்கடை** | | | |
| 01 | இல. 07 பொது வர்த்தக நிலையம் பன்றி இறைச்சிக் கடை (கம்பஹா) | 1,000.00 | 10,000.00 | 756,580.00 |
| 02 | இல. 08 பொது வர்த்தக நிலையம் ஆட்டிறைச்சி கடை (கம்பஹா) | 1,000.00 | 10,000.00 | 116,600.00 |
| | **வாகனங்கள் நிறுத்தும் இடத்திற்கான கட்டணம்** | | | |
| 03 | ஜா-எல, கம்பஹா பஸ் தரிப்பிடம் வாகனங்கள் நிறுத்தும் இடம் (வலய இல. 01) | 1,000.00 | 44,600.00 | 891,173. 00 |
| 04 | கம்பஹா - கொழும்பு பஸ் தரிப்பிடம் வாகனங்கள் நிறுத்தும் இடம் (வலய இல. 02) | 1,000.00 | 65,500. 00 | 1,296,127.00 |
| 05 | கம்பஹா - நிட்டம்புவ பஸ் தரிப்பிடம் வாகனங்கள் நிறுத்தும் இடம் (வலய இல. 02) | 1,000.00 | 30,300.00 | 665,679.00 |
| 06 | வைத்தியசாலைக்கு அண்மையில் வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் நிறுத்தும் இடம் | 1,000.00 | 64,500.00 | 1,152,000.00 |
| | **பொது மலசலக்கூடம்** | | | |
| 07 | ஒருத்தொட்ட வீதி பஸ் நிறுத்தும் இடத்துக்கு அண்மையில் மலசலக்கூடம் | 1,000.00 | 90,100.00 | 2,595,999.00 |
| 08 | ஜா-எல வீதியில் பஸ் நிறுத்தும் இடத்துக்கு அண்மையில் புதிய மலசலக்கூடம் | 1,000.00 | 28,500.00 | 799,999.00 |
| 09 | வைத்தியசாலைக்கு அண்மையில் புதிய மலசலக்கூடம் | 1,000.00 | 28,500.00 | 900,000.00 |
| | **வாராந்த சந்தை** | | | |
| 10 | யக்கல வாராந்த சந்தை | 1,000.00 | 105,000.00 | 6,050,150.00 |
| | **சிற்றுண்டிச் சாலை** | | | |
| 11 | கம்பஹா மாநகர சபை சிற்றுண்டிச் சாலை | 1,000.00 | 5,000.00 | 36,000.00 |

உங்களினால் முன்வைக்கப்படும் விலைமனு கட்டணத்திற்கு முத்திரை வரி கட்டணம் செலுத்தப்பட வேண்டும்

2021.10.01

ஜே.ஏ.எ.தீ.எஸ். ரணசிங்க,
நகர ஆணையாளர்,
கம்பஹா மாநகர சபை

# மின்னல் தாக்கி விவசாயி மரணம்



■ இ.நடராஜன், எஸ். கார்த்திகே

திருக்கோயில், சாகாமம் பகுதியில் நேற்று முன்தினம் (04) மாலை மின்னல் தாக்கியதில், சாகாமம் பாடசாலை வீதியைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான தம்பிமுத்து மோகனராசா (வயது 52) எனும் விவசாயி உயிரிழந்துள்ளார்.

இவர், தனது மகனின் வயலில் வரம்பு கட்டிக் கொண்டிருந்தபோதே மின்னல் தாக்கி, சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பான சட்டரீதியான மேலதிக நடவடிக்கைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மணல் அகழ்வுக்கு இடமளிக்க வேண்டாமென

# விவசாயிகள் எதிர்ப்பு

■ எம்.எம்.அஹமட் அனாம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் புதிதாக மணல் அகழ்வை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குவதற்கு இடங்களை பார்வையிடுவதற்கு, நேற்று (05) அதிகாரிகள் வருகை தந்தனர்.



இதன்போது ஒன்றுகூடிய பிரதேச விவசாயிகள், மணல் அகழ்வினால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாகவும் மேலும் மணல் அகழ்வுக்கு இடமளிக்க வேண்டாம் என்றும் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

கிரான் பிரசே செயலாளர் பிரிவில் மண் அகழ்வை மேற்கொள்வதற்காக அனுமதி கோரி, இரண்டு விண்ணப்பங்கள் பிரதேச செயலகத்துக்கு கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில், குறித்த இடங்களை பார்வையிடுவதற்காக திணைக்களங்களுடன் இணைந்து பிரதேச செயலக அதிகாரிகளும் நேற்று கள விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.



இதன்போது, வாகனேரி நீர்ப்பாசனத் திட்டத்தில் பட்டியடி வகுலாவெல, ஆனமடங்கி, தவனை, பிரம்படித்தீவு, நூறு ஏக்கர், மக்குரானை மற்றும் பள்ளிமடு போன்ற விவசாய கண்டங்களைச் சேர்ந்த 15,000 ஏக்கருக்கும் அதிகமான விவசாய காணிகள் மணல் அகழ்வினால் பாதிக்கப்படுவதாக அங்கு வருகை தந்த அதிகாரிகளிடம், விவசாயிகள் சுட்டிக்காட்டினர்.

மீண்டும் இப்பகுதியில் மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்படும் பட்சத்தில், விவசாய நிலங்கள் மேலும் பாதிக்கப்படும் என்பதனால் இப்பகுதியில் மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்க வேண்டாம் என்றும் இப்பகுதியில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் அதனை இடைநிறுத்தித் தருமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

விண்ணப்பதாரிகள் தாங்கள் அடையாளப்படுத்திய இடங்கள் நீர்ப்பாசனத் திட்டத்துக்குள் வருவதால், இது தொடர்பாக நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் தங்களது அதிகாரிகளுக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள் என்று, கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு தெரிவித்தார்.

# மட்டு. போதனாவுக்கு படைப்பிரிவு உதவி

■ எம்.எஸ்.எம்.நூர்தீன், ரீ.எல்.ஜவ்பர்கான்



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு, மட்டக்களப்பு 231ஆவது இராணுவப் படைப்பிரிவு மூன்றாவது தடவையாகவும் மருத்துவ உபகரண தொகுதியை வழங்கியுள்ளது.

அமெரிக்காவில் வாழ்கின்ற ஒன்றிணைந்த இலங்கை உறவுகளால் இலங்கை இராணுவ தலைமையகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க வழங்கப்பட்ட இந்த மருத்துவ உபகரணம், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு நேற்று (05) வழங்கிவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி கலாரஞ்சனி கணேசலிங்கத்திடம் மட்டக்களப்பு கல்லடியிலுள்ள 231ஆவது இராணுவ படைப்பிரிவின் கட்டளை அதிகாரியான பிறிகேடியர் கேணல் டிலூப பண்டார தலைமையில் இவற்றைக் கையளித்தனர்.

மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான ஒட்சிசன் செறிவாக்கி மற்றும் கொவிட் 19 தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிட்சையளிக்க பயன்படுத்தும் மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட மருத்துவ உபகரண தொகுதிகள் இதில் உள்ளடங்கியிருந்தன.

மூடப்பட்ட

# ச.தொ.ச மீண்டும் திறக்கப்படுமா?

■ வீ.சுகாந்தராஜா

மூடப்பட்ட காரைதீவு ச.தொ.ச மீண்டும் திறக்கப்படுமா எனப் பொதுமக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

கடந்த காலங்களில் இயங்கிவந்த காரைதீவு ச.தொ.ச விற்பனை நிலையம் கடந்த வருடம் மூடப்பட்டதனால் இப்பிரதேச மக்கள் அரசு அறிவிக்கும் நிவாரண விலைகளில் பொருள்கள் எதனையும் கொள்வனவு செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.




கொவிட் பெருந்தொற்றுக் காலப்பகுதியில் ச.தொ.ச விற்பனை நிலையங்களின் சேவை மிகவும் அத்தியாவசியமானது. காரைதீவு ச.தொ.ச. கிளை மூடப்பட்டதால் மேற்குறிப்பிட்ட மக்கள் பெரும் சிரமத்தை அனுபவிக்கின்றனர்.

எனவே, ச.தொ.ச காரைதீவுக் கிளையை மீண்டும் திறக்க வேண்டும் என மக்கள் கோருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது, காரைதீவு மற்றும் நிந்தவூர் பிரதேசங்களில் ச.தொ.ச விற்பனை நிலையங்கள் இல்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டை

# ‘ நிறுத்தவும்’

■ என்ராஜ்



இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டை நிறுத்துவதற்கு, இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென, குருநகர் கடற்றொழில் அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் யூலியன் சகாயராஜா தெரிவித்தார்.

இந்திய இழுவைப் படகுகளால், குருநகர் பகுதி மீனவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், இந்திய இழுவை படகுகளின் பிரச்சினை தொடர்பில் ஏற்கெனவே கடற்றொழில் அமைச்சு மட்டத்தில் முறையிட்டுள்ளோம் எனவும் இந்திய மீனவர்களின் எல்லை தாண்டி வருகை தருவதை நிறுத்தப்பட வேண்டும் எனவும் இந்த பிரச்சினையானது தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது எனவும் கூறினார்.

இந்திய மீனவர்களால் தமது மீனவர்கள் தாக்கப்படும் சம்பவம் நீண்ட நாள்களாக தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது எனத் தெரிவித்த அவர், இன்றைய சம்பவமானது நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது எனவும் கூறினார்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும் படகு உரிமையாளர்களுக்கும் இந்திய அரசாங்கத்தால் நட்டஈடு வழங்குவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்த அவர், ஏனென்றால் இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வருவது ஒருபுறம், அதேபோல மீனவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவது இன்னொருபுறமாக இருக்கின்றது எனவும் கூறினார்.

இந்த நிலையில், தமது மீனவர்கள் கடலில் சுதந்திரமாக தொழில் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது எனத் தெரிவித்த அவர், "இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறாமல் இருக்க வேண்டும். எமது மீனவர்கள் பாதுகாப்பான முறையில் தொழில் செய்து கரை திரும்ப வேண்டும். வாழ்வாதாரத்துக்காகவே எமது மீனவர்கள் கடலுக்கு தொழிலுக்கு செல்கின்றார்கள். இவ்வாறான அடாவடித்தனமான செயற்பாட்டை இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து செய்வதால், எமது மீனவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது" என்றார்.

"அத்துடன், நடுக்கடலில் மீனவர்களை தாக்குவதோடு அவர்களின் உயிர்களை காப்பாற்றாது கடலில் தத்தளிக்கிற நிலை காணப்படுகின்றது. இது கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும். இயற்கை அனர்த்தம் உள்ள நிலைமையில், தாக்கி சேதமாக்கப்பட்ட படகொன்று ஓட முடியாத நிலை காணப்பட்டிருந்தால், அந்த 3 மீனவர்களும் உயிரிழக்க கூடிய நிலையும் ஏற்பட்டிருக்கும்.

"எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டை நிறுத்துவதற்குரிய நடவடிக்கையை கடற்றொழில் அமைச்சும் அரசாங்கமும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்" என்றார்.

# சாந்திபுரம் பிரச்சினைக்கு தீர்வு



■ எஸ்.றொஸேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில், கடந்த சில தினங்களாக சீரற்ற காலநிலை காரணமாக மழை பெய்து வரும் நிலையில், மன்னார் - சாந்திபுரம் பகுதியில், வீடுகளுக்குள் மழைநீர் புகுந்தமையால், அப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் (04), மன்னார் மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு சென்றனர்.

இதன்போது, உரிய அதிகாரிகள் துரித நடவடிக்கையை மேற்கொள்ளாத காரணத்தால், உடனடியாக மன்னார் பிரதேசச் செயலாளரின் கவனத்துக்கு கொண்டு சென்ற நிலையில், மன்னார் பிரதேச செயலாளர் ம.பிரதீப் துரித நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டார்.

மன்னார் பிரதேச செயலாளரின் துரித நடவடிக்கையால் வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மன்னார் நகர சபையினர் குறித்த வெள்ளப்பாதிப்பு காணப்படும் பகுதிகளில், நேரடியாக சென்று பார்வையிட்டதோடு, குறித்த பகுதியில் சூழ்ந்துள்ள மழைநீர் தற்காலிகமாக வழிந்தோடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், மன்னார் நகர சபையின் செயற்பாட்டில் தற்காலிக வடிகால் அமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், நேரடியாக மழை நீரை கடலுடன் கலப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆடைத்தொழிற்சாலைக்கு

# ஊழியர்களை ஏற்றி சென்ற பஸ் விபத்து

■ கெ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு - பெரியகுளம் பகுதியில் ஆடைத்தொழிற்சாலைக்கு சென்ற பஸ் ஒன்று, நேற்று முன்தினம் (04) விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

நெடுங்கேணியில் இருந்து வெலிஓயா பகுதியில் அமைந்துள்ள ஆடைத்தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றச் சென்ற பஸ், மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவருக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை நெடுங்கேணி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# ‘அதிக சிறுவர்கள் போதைப்பொருளுக்கு அடிமை’

■ க. அகரன்

அதிகமான சிறுவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகி இருக்கிறார்கள் என, வவுனியா மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜோசப் ஜெயகெனடி தெரிவித்தார்.

சிறுவர்களின் நிலை தொடர்பில் கருத்துத் தெரிவைக்கும் போதே, அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், அதிகமான சிறுவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகி இருக்கிறார்கள் எனவும் இதனை மாற்ற சிறுவர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டியவர்களாக தாங்கள் இருப்பதாகவும் கூறினார்.

மேலும், சிறுவர் துஷ்பிரயோகம், வேலைக்கு அமர்த்துதல், இல்லங்களில் முடக்கி வைத்திருத்தல் போன்ற கோரமான செயல்களை இல்லாது செய்து, அவர்களுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக தாங்கள் செயற்படுவோமாக இருந்தால், நிச்சயமாக குழந்தைகள் மகிழ்வார்கள் எனவும், அவர் கூறினார்.



"சமகாலத்தில் போதைப்பொருள் பாவனை, ஏனைய சிறுவர்களை வஞ்சித்தல் போன்ற பல்வேறு விடயங்களை செய்யும் நிலைக்கு சிறுவர்கள் தள்ளப்பட்டிருப்பது ஆரோக்கியமானதல்ல.

"அண்மையில், சிறைச்சாலைகள் தகவல்படி, அதிகமான சிறுவர்கள் சிறைச்சாலைகளில் இருக்கிறார்கள்" என்றார்.

உரமின்மையால் தேயிலை உற்பத்தியில் வீழ்ச்சி

# தாக்கம் விரைவில் புரியும்



## நவின் திசாநாயக்க தெரிவித்தார்

■ எஸ்.கண்ணன்

'உரிய மாற்று ஏற்பாடுகளின்றி இரசாயன உர பயன்பாட்டுக்கு அரசாங்கம் தடை விதித்துள்ளதால் தேயிலை பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படக்கூடும் என தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் பெருந்தோட்டத்துறை அமைச்சருமான நவீன் திஸாநாயக்க, இதன் தாக்கம் ஐந்து ஆண்டுகளில் தெரியவரும் என்கிறார்.

நுவரெலியாவில் நேற்று முன்தினம் (4) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

' சீனாவிலிருந்து சேதன பசளை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் முற்பட்டது. எனினும், கிடைக்கப்பெற்ற மாதிரிகளில் பக்டீரியா இருப்பது உறுதிசெய்யப்பட்டது. இதனை வெளிப்படையாக அறிவித்த விவசாய திணைக்கள அதிகாரிகளுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். உண்மையை மறைப்பதற்கு பல அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கலாம். குறித்த சேதன பசளைக்கு அனுமதி வழங்கியிருந்தால் அதனால் மண்ணுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கும்.

தேயிலை உற்பத்திக்கு இரசாயன உரம் அவசியம். எனினும், நிபுணர்களின் ஆலோசனை மற்றும் மாற்று ஏற்பாடுகளின்றி எடுத்த எடுப்பிலேயே உர பயன்பாட்டுக்கு தடை விதிக்கப்பட்டது. இதனால் உரிய விளைச்சல் கிடைப்பதில்லை. தேயிலை பொருளாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் தாக்கம் இன்னும் ஐந்து ஆண்டுகளில் தெரியவரும்.

அதேவேளை, தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தால் பரிந்துரைக்கப்படும் உரத்தை மட்டும் பயன்படுத்துமாறு சிறுதேயிலை தோட்ட உரிமையாளர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.' - என்றார்.

தொழிலாளர்களின் நலன் கருதி முதலாளிமார் சம்மேளனத்துடன்

## சமரசப் பேச்சுக்குத் தயார்

### வடிவேல் சுரேஸ் எம்.பி தெரிவிப்பு

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நலன் கருதி முதலாளிமார் சம்மேளத்துடன் சமரசப் பேச்சுவார்த்தைக்கு தயார் என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்துள்ள அவர், சம்பள அதிகரிப்புக்கு எதிராக, பெருந்தோட்ட நிறுவனங்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, எதிர்வரும் டிசம்பர் மாதம் ஆறாம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எனவே, குறித்த வழக்கு தினத்திற்கு முன்னதாக கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் தொழிற்சங்கத்தினரும் பெருந்தோட்ட நிறுவனங்களும் பேச்சுவார்த்தை நடத்தி சுமூக இணக்கப்பாட்டுக்கு வருமாறு மேன்முறையீட்டுநீதிமன்றம் அறிவித்துள்ளதாகத் தெரிவித்துள்ள வடிவேல் சுரேஸ், 1000 ரூபாய் சம்பளம் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை. பெருந்தோட்ட நிறுவனங்களும் ஒரு சில விட்டுக்கொடுப்புக்களோடு இறங்கி வரவேண்டும். அவ்வாறு வரும்பட்சத்தில் இன்றைய காலத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகளை கருத்தில் கொண்டு நாங்களும் சமரச பேச்சுவார்த்தைக்கு தயாராக இருக்கின்றோம் என்றார்.

பெருந்தோட்ட மலையக மக்கள் மிகவும் மோசமான பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற நிலையில், பெருந்தோட்ட நிறுவனங்களும் தொழிற்சங்கங்களும் பேச்சுவார்த்தை ஒன்றை நடாத்தி பிரச்சனையை முடிவுக்குக் கொண்டுவருவது இருசாராருக்கும் நன்மையாகும்.

தொழிலாளர்களையும் பாதுகாத்து தொழில் துறையும் பாதுகாத்து நிர்வாகமும் சரிவர செயல்பட வேண்டுமாயின், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் முதலாளிமார்களுடன் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருக்கின்றது என்றார்.





# சிறுவர் தின நிகழ்வு...



வன்னி ஹோப் நிறுவனத்தின் அனுசரணையில், வரக்காபொல தமிழ் சமூக அபிவிருத்தி பேரவையின் தலைவர் திருமதி கோமதியின் தலைமையில், நேற்று முன்தினம்(3) களுத்துறை- மில்லனிய நிவ்செட்டல் முகப்பட்டி தோட்டத்தில் சிறுவர் தின நிகழ்வு இடம்பெற்றது.இதன்போது சிறுவர்களால் மரக்கன்றுகள் நாட்டப்பட்டதுடன் சிரமதானம் மற்றும் ஆசீர்வாத பூஜை என்பன இடம்பெற்றன. இதில் கலந்து கொண்ட சிறுவர்களுக்கு சமூக சேவையாளர் கே.கே.கனகர் பரிசில்கள் வழங்கி வைத்தார். (சிவாணி ஸ்ரீ)

நுவரெலியா சீதையம்மன் கோவில்

## புனரமைப்புக்கு இந்தியா உதவும்

### இந்திய வெளிவிவகார செயலாளர் உறுதி என்கிறார் இராதா

■ நீலமேகம் பிரசாந்த்



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவுக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணிக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம்(4) மாலை கொழும்பில் இடம்பெற்றது.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஸ்ணன், நுவரெலியாவில் அமையப்பெற்றுள்ள சீதையம்மன் கோவிலின் பிரசாதம் மற்றும் நினைவு சின்னம் என்பவற்றை இந்திய வெளிவிவகார செயலாளரிடம் கையளித்ததுடன், சீதையம்மன் கோவில் புனரமைப்பு தொடர்பில் கலந்துரையாடினார்.

சீதைக்காக அமையப்பெற்ற உலகின் முதல் கோவில் என்ற ஸ்தானத்தை கொண்டுள்ள நுவரெலியா சீதையம்மன் கோவிலுக்கு வருகை தருவதாகவும் கோவிலின் புனரமைப்புக்காக இந்திய அரசாங்கம் நிதியுதவி வழங்குவதாகத் தெரிவித்த அவர். இந்திய வெளிவிவகார செயலாளர், அதற்கான முழுமையான ஏற்பாடுகளையும் தான் ஏற்படுத்தி தருவதாக இராதாகிருஸ்ணனிடம் உறுதியளித்துள்ளார்.

குளவிக்கொட்டால் உயிரிழந்த

## பெண்ணுக்கு கொரோனா

■ தனராஜா

குளவி கொட்டுக்கு இலக்கான நிலையில், தியத்தலாவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பெண் ஒருவர் மரணமானதாக வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ள குறித்த பெண்ணுக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஹப்புத்தளை - தொட்டலாகலை பகுதியில் கடந்த 29ஆம் திகதி 14 பேர் குளவி கொட்டுக்கு இலக்காகியிருந்தனர்.

அவர்களில் ஹப்புத்தளை - பிட்டரத்மலை பகுதியைச் சேர்ந்த 49 வயதான பெண்ணொருவரே இவ்வாறு மரணித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சட்டவிரோதமாக கால்நடைகளை

## ஏற்றிச் சென்ற லொறி விபத்துக்குள்ளானது

■ எம். செல்வராஜா

கால்நடைகளை சட்டவிரோதமாக ஏற்றிச் சென்ற லொறியொன்று விபத்துக்குள்ளாகியதில், லொறியின் சாரதியும் உதவியாளரும் காயமடைந்து, தியத்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹப்புத்தளை- வல்கவெல பகுதியிலேயே நேற்று (5) இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான லொறியிலிருந்து 16 கால்நடைகளும் வெள்ளவாயவிலிருந்து நுவரெலியாவுக்கு கொண்டு செல்லப்பட்ட போதே, விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனையடுத்து லொறியிருந்த 9 பசுக்களும் 7 எருமை மாடுகளும் ஹப்புத்தளை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணையை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

நிரம்பி வழியும் குப்பைகளால்

## கடவளையில் நோய்கள் பரவும் அபாயம்

■ இரா.யோகேசன்

கினிகத்ஹேன- கடவளை தோட்டத்தின் பொது மக்கள் நடமாடும் பகுதியில் அமைந்துள்ள குப்பை தொட்டியில், குப்பைகள் நிரம்பி காணப்படுவதால் அது பொது மக்களுக்கு பல்வேறு வகையில் அசௌகரியங்களுக்கு ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது மலையகத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வரும் நிலையில், குறித்த குப்பைத் தொட்டியில் காணப்படும் நீர் நிரம்பக்கூடிய பொருட்களும் கழிவுகளாகக் கொட்டப்பட்டுள்ளன. இதனால் மழை நீர்த் தேங்கி டெங்கு உள்ளிட்ட நோய்கள் பரவும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது தொடர்பில் உரியவர்கள் கவனம் செலுத்தி இதற்கு தீர்வை பெற்றுத்தருமாறு குறித்த தோட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஊவாவில் 15,812 மாணவர்கள்

## உயர்தரத்துக்கு தகுதி பெற்றுள்ளனர்

■ எம். செல்வராஜா

ஊவா மாகாணத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய, 21,086 மாணவர்களுள் 15,812 பேர், க.பொ.த. உயர்தரத்துக்குத் தகுதி பெற்றுள்ளனர் என, முன்னாள் ஊவா மாகாண ஆளுனர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

நேற்று (5) பதுளையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், 'எமது நாட்டின் கல்விப் பெறுபேற்று கணிப்பின்படி மொணராகலை மாவட்டம் நாட்டின் எட்டாவது இடத்திலும், பதுளை மாவட்டம் நாட்டின் 12வது இடத்திலும் இருந்து வருகின்றன. நாட்டின் 99 கல்வி வலயங்களில், மொணராகலை மாவட்டத்தின் தனமல்வில கல்வி வலயம் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுள்ளது.

க.பொ.த. சாதாரண தர பெறுபேற்றுக்களின் அடிப்படையில், தென் மாகாணம், வடமேல் மாகாணம், மேல் மாகாணம் என்ற வரிசையில், நான்காவது இடத்தில் ஊவா மாகாணமும் இருந்து வருகின்றது.

அத்துடன், ஊவா மாகாணத்தில் 84.61 சதவீத வளர்ச்சியும் தனமல்வில கல்வி வலயமும், பண்டாரவளை கல்வி வலயம் - 77. 96 சதவீதம், வெலிமடை கல்வி வலயம் - 76. 77 சதவீதம், பதுளை கல்வி வலயம் - 75. 71 சதவீதம், மகியங்கனை கல்வி வலயம் - 66.09 சதவீதம் என்ற வகையிலும் க.பொ.த. சாதாரண தர பெறுபேறுகள் அமைந்துள்ளன என்றார்.

நுவரெலியா மாவட்டத்திலும்

## தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பம்

■ ரஞ்சித் ராஜபக்ஸ

நுவரெலியா மாவட்டத்தில் நாட்பட்ட நோய் மற்றும் விசேட தேவையுடைய 12 தொடக்கம் 19 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான முதலாவது பைஸர் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை மூன்று வைத்தியசாலைகளில் நேற்று (5) ஆரம்பிக்கப்பட்டன.

இதற்கமைய, டிக்கோயா- கிளங்கன் ஆரம்ப வைத்தியசாலை, நுவரெலியா பொது வைத்தியசாலை மற்றும் ரிக்கிலகஸ்கட பொது வைத்தியசாலை என்பவற்றில், தினமும் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை, இந்த செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது.



# புதினம் பார்க்கச் செல்வதைத் தவிர்ப்பதே யாவருக்கும் உத்தமம்

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டு, மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் அமுலில் இருந்தாலும் ஒவ்வொரு நாளும் இடம்பெறுகின்ற விபத்துக்களின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

விவேகமின்றி வேகமாகச் செல்லும் வாகனங்கள் மோதிக்கொள்வதால், பாதசாரிகளும் வாகனங்களில் பயணிப்போரும் மரணங்களைத் தழுவிக்கொள்கின்றனர். ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த காலத்திலும் விபத்துக்கள் இடம்பெற்றன என்பதை மறுப்பதற்கில்லை

மனிதர்களின் கவனயீனத்தால் ஏற்படும் விபத்துக்களுக்கு அப்பால், இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகி பலரும் மரணிக்கின்றனர். சிலர் புதினம் பார்க்கச் சென்று மரணித்துவிடுகின்றனர். இன்னும் சிலர் காட்டு விலங்குகளின் தாக்குதல்களுக்கு இலக்காகி மரணிக்கின்றனர்.

நாட்டில் தற்போது நிலவிக்கொண்டிருக்கும் அசாதாரண வானிலை இன்னும் சில நாட்களுக்கு நீடிக்குமென வானிலை அவதான நிலையம் எதிர்வுகூறியுள்ளது. ஆகையால், வீட்டை விட்டு வெளியேறும் போதுமட்டுமின்றி, வீடுகளுக்குள் இருக்கும் போதும் மிகக் கவனமாக இருக்கவேண்டும்.

நீரேந்தும் பிரதேசங்களில் மழைபெய்வது தாழ்நிலங்களில் வசிப்போருக்குத் தெரியாது. ஆகையால், ஆற்றங்கரையோரங்களில் வாழ்வோர் அவதானமாகவே இருக்கவேண்டும். ஆற்றுக்குள் குளிப்பதற்குச் செல்வதையும் தவிர்த்தல் நல்லது. இல்லையேல், ஆற்றுக்கு அடியில் மிகவேகமாக பாயும் நீரோட்டம், இழுத்துச் சென்றுவிடும். அவ்வாறான பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, பாறைகள் புரண்டு விழுதல், மரங்கள் முறிந்து விழுதல் உள்ளிட்டவற்றை பார்ப்பதற்கு யாரும் செல்லவேண்டாம். அவ்வாறு புதினம் பார்க்கச் சென்றவர்கள் பலர், இயற்கை அனர்த்தங்களில் சிக்கி மரணித்துள்ளமை கடந்தகால கசப்பான படிப்பினைகளாகும்.

சில நாட்களுக்கு மணித்தியாலயத்துக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசுமென வானிலை அவதானம் நிலையம் எச்சரித்துள்ளது. இதனால், முறிந்துவிழக்கூடிய மரங்களுக்கு அருகில் செல்வதை தவிர்க்கவேண்டும். குடியிருப்புகளுக்கு அருகில் இருக்கும் பாரிய மரங்களின் கிளைகளையாவது தறித்துக்கொள்ளவேண்டும். இல்லையேல் இயற்கை தாண்டவமாடிவிட்டுச் சென்றுவிடும்.

இதனால், உயிரிழப்புகள் மட்டுமன்றி, சொத்திழப்புகளும் ஏற்பட்டுவிடும். இதேவேளை, முன்கூட்டிய திட்டங்களை வகுப்பது அந்தந்த பிரதேசங்களைச் சேர்ந்த, அத்துறைசார்ந்தவர்களின் பொறுப்பாகும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். மக்கள் பாதிக்கப்பட்டதன் பின்னர், அவர்களுக்கு நிவாரணங்களை வழங்கி, தற்காலிக கூடாரங்களை அமைத்து தங்கவைத்து, உலருணவுப் பொருட்களை வழங்குவதைவிடவும், வெள்ளம் தேங்கிநிற்கும் பகுதிகளை இனங்கண்டு, முன்கூட்டிய நடவடிக்கைகளை எடுக்கலாம். மண்சரிவு ஏற்படக்கூடிய பிரதேசங்களை அடையாளங்கண்டு, மக்களை அப்புறப்படுத்தி மாற்று ஏற்பாடுகளைச் செய்துகொடுக்கலாம். ஆனால், இடி, மின்னலில் இருந்து தங்களைத் தாங்களாவே காப்பாற்றிக்கொள்ள வேண்டும். மழைகாலங்களில், இலத்திரனியல் உபகரணங்களை பயன்படுத்துவதை முற்றாகத் தவிர்தலே உசிதமானது. மக்களும் இயற்கையைச் சுரண்டாமல் இருந்தால், மண்சரிவு, கற்பாறைகள் புரண்டு விழுதல் உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதை தவிர்க்கலாம். இயற்கையின் மீது அன்பு செலுத்தி, நம்மை நாமே காப்பாற்றிக்கொள்வோம்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# தோல்வி கண்ட அவசரகாலச் சட்டம் தேவையா?



எம்.எஸ்.எம். ஐயூப்

அவசரகாலச் சட்டம் என்றாலேயே, மக்கள் பீதியில் உறைகின்றனர். காரணம், இதுவரை காலமும் அடக்குமுறைச் சட்டமாகவே அது பிரயோகிக்கப்பட்டு வந்துள்ளது. அரச தலைவர்கள், தாம் நல்ல நோக்கத்துடனேயே அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பிப்பதாக எப்போதும் கூறியுள்ளனர். ஆனால், நடைமுறையில் அடக்குமுறைக்காகவே அது பாவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இலங்கையில் பிறப்பிக்கப்பட்ட அவசரகாலச் சட்டங்களால் தமிழ் மக்களே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏனெனில், அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையிலான போர் நடைபெற்ற காலத்தில், நீண்ட காலமாக அடிக்கடி பல்வேறு நிலைமைகளை எதிர்கொள்வதற்காக அரசாங்கங்கள் அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளன.

அரசாங்கங்கள், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தைப் போலவே, அவசரகால சட்டத்தையும் புலிகளை அடக்குவதற்காகப் பாவித்ததால் அவ்விரண்டு சட்டங்களாலும் மக்கள், குறிப்பாக தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டு வந்துள்ளனர்.

கொவிட் 19 நோயின் தாக்கத்தின் மத்தியில், நாட்டில் ஏற்பட்டிருக்கும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாட்டையும் விலைவாசி உயர்வையும் காரணம் காட்டியே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஓகஸ்ட் 30 ஆம் திகதியன்று அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்தார். ஆனால், அத்தியாவசியப் பொருட்களின் சீரான விநியோகத்துக்குத் தடையாக அது செயற்படாவிட்டாலும் அந்தக் குற்றச்சாட்டின் பேரில் மக்கள் கைது செய்யப்படும் அபாயம் இருக்கிறது.நாட்டில் அரசியல்வாதிகளும் உயர் அதிகாரிகளும், குறிப்பாக பொலிஸாரும் சட்டங்களைத் துஷ்பிரயோகம் செய்து மக்களை இம்சிப்பது ஒன்றும் புதிய விடயமல்ல. இன ஒற்றுமையை நோக்கமாகக் கொண்டே சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையின் கீழான சட்டம் (ICCPR) 2007 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. பெரும்பான்மைவாதத்தின் மூலம் சிறுபான்மையினர் பாதிக்கப்படுவதைத் தடுப்பதே இந்த உடன்படிக்கையின் நோக்கமாகும். ஆனால், அச்சட்டம் அநேகமாக சிறுபான்மையினருக்கு எதிராகவே பாவிக்கப்பட்டு வந்துள்ளது. பெரும்பான்மையினர் மத்தியில், மத நிந்தனையில் ஈடுபடுவோர் பலர் உள்ளனர். அண்மையிலும் ஒரு துறவி, அரச ஊடகங்கள் மூலமாகவே அந்தப் பணியில் ஈடுபட்டார். அது, நாடாளுமன்றத்திலும் கூறப்பட்டது. ஆனால், அவருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆளும் கட்சித் தலைவர்களே அவரை நியாயப்படுத்துகின்றனர். எனினும், சில வருடங்களுக்கு முன்னர், முஸ்லிம் அப்பாவிப் பெண்ணொருவர், வண்டிச் சில்லின் படம் பொறிக்கப்பட்ட ஆடையை அணிந்து வெளியே சென்ற போது, அது பௌத்தத்தின் சின்னமான தர்மச் சக்கரம் என்றும் புனித அடையாளம் எனக் கூறியும் மத நிந்தனையில் அவர் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு ICCPR சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். பல மாதங்களுக்குப் பின்னரே நீதிமன்றத்தின் மூலம் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

எனவேதான், தற்போது அமுலில் உள்ள அவசரகாலச் சட்டம் தொடர்பில், சிறுபான்மை மக்களும் எதிர்க்கட்சிகளை ஆதரிப்போரும் கவனமாக இருக்க வேண்டியுள்ளது. அண்மையில், அரசாங்கம் இந்த அவசரகாலச் சட்டத்தின் கீழ் அரிசி மற்றும் சீனி விலையை நிர்ணயித்து, வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டது. ஆனால், வர்த்தகர்கள் அவற்றை பொருட்படுத்தாததால் அரசாங்கம் அந்த வர்த்தமானி அறிவித்தல்களை வாபஸ் பெற்றுள்ளது.எனவே, தற்போதைய அவசரகாலச் சட்டம், அதன் நோக்கத்தை நிறைவேற்றத் தவறிவிட்டது. இந்த நிலையில் அது தொடர்ந்தும் அமுலில் இருப்பதில் அர்த்தமே இல்லை. இப்போது அது, வேலை நிறுத்தங்களைத் தடைசெய்யவும் ஊடகங்களைக் கட்டுப்படுத்தவும் மாத்திரமே அரசாங்கத்துக்கு உதவும். அதாவது, அடக்குமுறைக்கு மட்டுமே அது உதவும்.

அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பிப்பது தொடர்பாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் ஓகஸ்ட் 30 ஆம் திகதி வெளியிடப்பட்ட ஒரு வர்த்தமானியில் "தற்போது இலங்கையில் வேகமாகப் பரவி வரும் கொவிட் 19 தொற்றுநோயின் காரணமாக இலங்கையில் அவசர நிலையொன்று தோன்றியுள்ளதால், மக்களின் பாதுகாப்பு மற்றும் நாட்டின் இயல்பு நிலையைப் பாதுகாப்பதற்காக, மக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் நடத்திச் செல்வதற்காக, பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அத்தியாவசியப் பொருட்களை விநியோகிப்பதற்கான அவசரகாலச் சட்டத்தை பிறப்பிக்கிறேன்" என்ற நீண்ட வசனமொன்றை அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, அன்றே அந்த அவசரகால சட்டம் எவ்வாறு அமுலாக்கப்படும் என்பதை விளக்கும் வகையில், ஜனாதிபதியால் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மற்றொரு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. அதன் ஆரம்பத்தில் அவசரகாலச் சட்டத்தின் நோக்கம் விவரிக்கப்பட்டுள்ளது

பாவனையாளர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையிலும் மக்களின் சேமநலத்தைப் பாதிக்கும் வகையிலும், அரிசி மற்றும் சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பதுக்கல், விநியோகத்துக்கு இடையூறுகளை விளைவித்தல், அதிக விலையை அறவிடுதல் மற்றும் சந்தை முறைகேடுகளைத் தோற்றுவித்தல் போன்ற நடவடிக்கைகளைத் தடுப்பதே இந்த விதிமுறைகளின் நோக்கமாகும் என அதில் ஆரம்பத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களின் சீரான விநியோகத்துக்காக தகுதி வாய்ந்த அதிகாரியாக மாவட்ட செயலாளர்கள் செயற்படுவதைப் பற்றியும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் ஒருவரை நியமிப்பதைப் பற்றியும், அவ்விநியோகத்துக்கு தடையாகும் வகையில் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்படும் துறைகளின் ஊழியர்கள் தடையின்றி கடமைக்கு வருவதைப் பற்றியும், வேலைநிறுத்தங்களுக்கு இடமில்லை என்பதைப் பற்றியும் பொருட்களை பதுக்கினால் களஞ்சியசாலைகள் மற்றும் வாகனங்கள் போன்ற உடைமைகளைப் பறிமுதல் செய்வது தொடர்பாகவும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்றே அவசரகால சட்டத்தின் கீழ் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளராக மேஜர் ஜெனரல் செனரத் நிவுன்ஹெல்ல, அதி விசேட வர்த்தமானி அறிவித்தல ஒன்றின் மூலம் நியமிக்கப்பட்டார். அத்தோடு, அன்றே நான்காவது வர்த்தமானி அறிவித்தல் ஒன்றும் வெளியிடப்பட்டது. அதன்மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சட்டத்தின் கீழ் எந்தெந்த சேவைகள் அத்தியாவசிய சேவைகளாகக் கருதப்பட வேண்டும் என்பது விளக்கப்பட்டுள்ளது. அந்த நான்கு வர்த்தமானிகளின் கீழ் நடைமுறைக்கு வந்த தற்போதைய அவசரகாலச் சட்டத்தின் கீழ், அரிசி, சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்கி வைத்திருந்த வர்த்தகர்களின் களஞ்சியங்கள் சிலவற்றை அதிகாரிகள் பலாத்காரமாகத் திறந்து, அவற்றில் இருந்த பொருட்களை கைப்பற்றினர். பின்னர் அவை பறிமுதல் செய்யப்படாது, அதிகாரிகளால் கொள்வனவு செய்யப்பட்டு, சதோச நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டன. அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலையும் நிர்ணயிக்கப்பட்டது.

ஆயினும், பிரதான வர்த்தகர்கள், அவசரகாலச் சட்டத்தை பொருட்படுத்தவில்லை. அவசரகாலச் சட்டத்துக்கு முன்னரே, ஒரு கிலோ சீனிக்கு விதிக்கப்பட்ட 50 ரூபாய் சுங்க வரியை 25 சதமாகக் குறைத்து விற்பனை விலையாக 85 ரூபாய் விதிக்கப்பட்ட போதிலும் அந்த விலைக்கு அவர்கள், சீனி விற்கவில்லை. மாறாக அவர்கள், சீனியைப் பதுக்கினர். களஞ்சியசாலைகளை முற்றுகையிட்ட அதிகாரிகள் பின்னர் வரியையும் இழந்து, ஒரு கிலோகிராம் சீனியை 115 ரூபாய்க்கு விற்க அனுமதி வழங்கினர்.

அரிசிக்கும் அதுவே நடந்தது. அவசரகால சட்டத்தின் கீழ் அரிசிக்கும் நெல்லுக்கும் கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டது. வர்த்தகர்கள் அப்போது அரிசியை பதுக்கிவிட்டு, விவசாயிகள் தமக்கு கட்டுப்பாட்டு விலைக்கு நெல்லை விற்பதில்லை என்றும், எனவே தம்மிடம் அரிசி இல்லை என்றும் கூறினர். அரசாங்கம் அடிபணிந்தது. அரிசிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டது. அன்றே தாமாகவே புதிய விலையை அரிசிக்கு விதித்த வர்த்தகர்கள், ஒரே நாளில் சந்தைக்கு அரசி விநியோகித்தனர்.

அவர்கள் பதுக்கியிருக்காவிட்டால், அந்த அரிசி எங்கிருந்து வந்தது? ஒரே இரவில் விவசாயிகளிடம் நெல்லைக் கொள்வனவு செய்து உடனே அதனைக் குற்றி அரிசியை பெற்று, விடியும்முன் பொலன்றுவையிலிருந்து புறக்கோட்டைக்கு அனுப்ப முடியுமா?

இப்போது அவசரகாலச் சட்டத்தால் எந்தப் பயனும் இல்லை. அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்குவதையும் விலை ஏற்றத்தையும் தடுப்பதே அதன் நோக்கம் என, மேற்படி வர்த்தமானி அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும், வர்த்தகர்கள் அரிசியையும் சீனியையும் பதுக்கியது மட்டுமல்லாமல், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையை அரசாங்கமே வாபஸ் பெறவும் செய்தனர். தாமே விலையையும் நிர்ணயித்தனர். அதிகாரிகள், பதுக்கலில் ஈடுபட்ட எந்தவொரு களஞ்சியசாலையையும் பறிமுதல் செய்யவும் இல்லை, வர்த்தமானிகளில் கூறப்பட்டதைப் போல், பொருட்களைப் பதுக்கிய வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவும் இல்லை. இப்போது வர்த்தகர்கள் விதித்த அரிசி மற்றும் சீனி விலையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே, அவசரகாலச் சட்டம் தோல்வி கண்ட சட்டமாகவே இருக்கிறது.

எனினும், அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்துக்கு இடையூறாக இருந்ததாகக் கூறி, அச்சட்டத்தை அரச துறையிலுள்ள ஊழியர்களுக்கு எதிராக பாவிக்கும் அபாயம் இருக்கிறது. அதேபோல், அத்தியாவசியப் பொருட்களின் சீரான விநியோகத்துக்குத் தடையாகும் வகையில் சொல்லாலோ, எழுத்தாலோ செயற்பட்டால் அவ்வாறானவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்று ஒரு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு எதிராகவும் ஊடகங்களுக்கு எதிராகவும் அந்த வர்த்தமானிப் பிரமாணத்தைப் பாவிக்கும் அபாயமும் இருக்கிறது. இந்த நிலையில், நோக்கத்தை அடையத் தவறிய தோல்வி கண்ட அவசரகாலச் சட்டத்தை வாபஸ் பெறுமாறு, அரசாங்கத்தை எதிர்க்கட்சிகள் வற்புறுத்த வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

எடுத்தெறிந்து பேசுவது மமதையின் வெளப்பாடு என்றே சொல்ல வேண்டும். விதண்டாவாதத்துடன் எவருக்கும் பணியாமல், தாங்கள் சொல்வது மட்டுமே சரியானது எனப் பேசுபவர்களை, எவருமே விரும்பமாட்டார்கள்.

எமது நடை, உடை, பாவனை, பேசும் முறை போன்றவற்றை, சுற்றி இருப்பவர்கள், எப்பொழும் அவதானித்துக் கொண்டே இருப்பார்கள். கண்ணியமாக நடந்து கொள்வபர்களேயே சமூகம் விரும்புகின்றது.

எவ்வளவு பெரும் அந்தஸ்தும் கல்விப் புலமையும் இருப்பவர்களின் நடத்தையிலும் குணத்திலும் கோணல் புத்தி இருந்தால், அவர்களிடம் இருந்து மற்றையோர் விலகிப்போய் விடுவார்கள்.

நெஞ்சத்தில் மாசு இன்றி, கலகலப்பாக, நகைச்சுவை உணர்வோடு, ஆணவச் செருக்கு அற்றவர்களை, விரும்பாதவர்கள் எவருமே இல்லை.

வெறுப்பு குரோதங்களை வளர்ப்பது சுலபமானது. சாந்தம், அமைதி, எளிமையுடன் வாழ்வதற்கு, ஆன்ம சுத்தி அவசியமானது. இதற்கு மனோ சக்தி பிரதானமானது.

நல்லன எதுவெனப் பலருக்கும் தெரியும். ஆனால், அவற்றைக் கடைப்பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். இது சிரமமானது அல்ல!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அறுவடைக்குப் பின்னர் வரும் யானைகள்

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் பகுதியில் அறுவடைகாலங்களில் மட்டும் வந்து பயிர்களை அழித்துவந்த காட்டுயானை தற்பொழுது அறுவடைமுடிந்து ஒரு மாதம் கடந்த நிலையிலும் தற்பொழுதும் பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

தினமும் இரவு வேளைகளில் மக்கள் குடியிருப்புகளுக்குள் வரும் யானைகள் பயன்தரக்கூடிய பயிர்களை அழித்துவருகிறது.

மிக அச்சத்தின் மத்தியில் ஒவ்வோருநாளும், கடக்கவேண்டிய நிலையில் இருப்பதாகவும் இது தொடர்பாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மின்வேலி அமைத்துதருவதாக பலவருடம் எம்மை ஏமாற்றிவருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தங்களையும் தமது உடைமைகளையும் யானை அழித்தபின்னரா மின் வேலி அமைக்கப்படும் என மிக வேதனையுடன் தமது ஆதங்கத்தினை தெரிவித்துள்ளனர் .

எனவே மக்களின் நலனில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே, அனைவரினதும் ஆவலாக உள்ளது.

( சுப்ரமணியம் பாஸ்கரன்)



புதுச்சேரி

# பிரியங்காவின் கைதை கண்டித்து போராட்டம்

பிரியங்கா காந்தி கைது செய்யப்பட்டதை கண்டித்து புதுவை ராஜீவ் காந்தி சதுக்கத்தில் மகிளா காங்கிரசார் நடிகை நக்மா தலைமையில் திடீர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உத்தர பிரதேசத்தின் லகிம்பூர் கேரியில் நடந்த போராட்டத்தில் கொல்லப்பட்ட விவசாயிகளின் குடும்பத்தினரை சந்திக்க சென்ற காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தியை பொலிஸார் கைது செய்தனர். இதனை கண்டித்து நாடு முழுவதும் காங்கிரசார் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புதுச்சேரி மகளிர் காங்கிரஸ் சார்பில் ராஜீவ்காந்தி சதுக்கத்தில் திடீரென்று மறியல் போராட்டம் நடத்தினார்கள். போராட்டத்திற்கு அகில இந்திய மகளிர் காங்கிரஸ் தலைவியும், நடிகையுமான நக்மா தலைமை தாங்கினார்.

இதில் புதுவை மாநில மகிளா காங்கிரஸ் தலைவி பஞ்சகாந்தி, நிர்வாகிகள் அஞ்சலாட்சி, ஜெயலட்சுமி, விஜயகுமார் மற்றும் நிர்வாகிகள் கலந்துகொண்டு மத்திய அரசாங்கத்துக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினார்கள். இதனால் அங்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதுபற்றி தகவல் அறிந்ததும் கோரிமேடு பொலிஸார் அங்கு விரைந்து வந்து மறியலில் ஈடுபட்டவர்களை கலைந்து செல்லுமாறு அறிவுறுத்தினர். அதையடுத்து அவர்கள் மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர்.




சென்னை

## வேட்புமனு நிராகரிப்பு;
## ஸ்டாலின் வீட்டின் முன் தீக் குளித்தவர் மரணம்

ஊராட்சித் தேர்தலில் வேட்புமனு நிராகரிக்கப்பட்டதால்,விரக்தி அடைந்து, முதலமைச்சர் ஸ்டாலின் வீட்டின் முன் தீக்குளித்தவர் நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்தார்.

தென்காசி மாவட்டம் குருவிகுளம் ஒன்றியம் ஜமீன் தேவர்குளம் ஊராட்சித் தலைவர் பதவி, பட்டியலின சமூகத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதே ஊரைச் சேர்ந்த வெற்றிமாறன்(48), அவரது மனைவி சபரியம்மாள் (46), மதிமுகவைச் சேர்ந்த ராமசாமி ஆகியோர் இப்பதவிக்கு மனுதாக்கல் செய்திருந்தனர்.

வேட்புமனு பரிசீலனையின்போது, வெற்றிமாறனுக்கு வீட்டுவரி பாக்கி இருப்பதை ராமசாமி தரப்பினர் சுட்டிக்காட்டினர். இதனால், வெற்றிமாறன், அவரது மனைவியின் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. ஊராட்சித் தலைவராக ராமசாமி போட்டியின்றித் தேர்வானார்.

வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதால் கடும் விரக்தியில் இருந்த வெற்றிமாறன், சென்னை தேனாம்பேட்டையில் உள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வீட்டுக்கு அருகே வந்து, திரவமொன்றை உடலில் ஊற்றி, தீவைத்துக் கொண்டார்.

அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் தீயை அணைத்து, கீழ்ப்பாக்கம் அரசாங்க மருத்துவமனையில் சேர்த்தனர். சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் மாலை வெற்றிமாறன் உயிரிழந்தார்.

பெங்களூர்

## ‘ஜனநாயகம் செத்துவிட்டது’



நாட்டில் ஜனநாயகம் செத்துவிட்டது. சர்வாதிகாரி ஹிட்லர் மனநிலையுடன் ஆட்சி செய்பவர்களின் மோசமான செயல்பாடுகள் எல்லை மீறிவிட்டது. இவ்வாறு கர்நாடக காங்கிரஸ் தலைவர் டி.கே.சிவக்குமார் பெங்களூருவில் நேற்று நிருபர்களுக்கு பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்ததாவது, நாட்டில் விவசாயிகளுக்கு பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளது. உத்தர பிரதேசத்தில் போராட்டம் நடத்திய விவசாயிகள் மீது மத்திய அமைச்சர் அஜய் மிஸ்ராவின் காவல் வாகனத்தை ஏற்றி 4 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இந்த சம்பவத்துக்கு பொறுப்பேற்று மத்திய அமைச்சர் அஜய் மிஸ்ரா, உத்தரபிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் ஆகியோர் இராஜினாமா செய்ய வேண்டும்.

விவசாயிகள் இறப்புக்கு காரணமானவர்கள் மீது கொலை வழக்கு பதிவு செய்து கைது செய்ய வேண்டும். இது வெறும் கொலை அல்ல. ஒட்டுமொத்த விவசாயிகள் கொலை செய்யப்படுவதற்கு சமம். இறந்த விவசாயிகளின் குடும்பத்தினரை நேரில் சந்திக்க சென்ற பிரியங்கா காந்தியை அம்மாநில பொலிஸார் சட்டவிரோதமாக கைது செய்துள்ளனர். இது ஒட்டுமொத்த பெண் சமுதாயத்துக்கு இழைக்கப்பட்ட அவமானம்.இவ்வாறு நிருபர்களுக்கு பேட்டியில் தெரிவித்துள்ளார்.

சென்னை

## கோவில்களை திறக்க கோரி
## நாளை கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்



தமிழக பாரதிய ஜனதா கட்சி தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு கிழமைகளில் அனைத்து கோவில்களையும் மூடுவதால் மக்கள், வணிகர்கள் என இலட்சக்கணக்கான பேர் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே தமிழக அரசாங்கம் இனியும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக கோவில்களையும் திறக்குமாறு அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு செல்வதற்காக நாளை 7ஆம் திகதி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் தமிழகம் முழுவதும் நடக்கிறது.

சென்னை காளிகாம்பாள் கோவிலுக்கு முன்பாக நடைபெறும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு நான் தலைமை ஏற்கிறேன். இதனை தொடர்ந்து கிறிஸ்தவ தேவாலயங்கள், இஸ்லாமிய வழிபாட்டு தலங்கள் அருகே பா.ஜ.க. சிறுபான்மையினர் அணி தலைவர்கள் தலைமையில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அவர் கூறியுள்ளார்.

திண்டுக்கல்

## போலி வழக்கறிஞருக்கு ஆறு ஆண்டுகள் சிறை

நீதிபதிபோன்று கையெழுத்திட்டு, தீர்ப்பு வழங்கி ஏமாற்றிய போலி வழக்கறிஞருக்கு 6 ஆண்டுகள் சிறை தண்டனை, ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்து திண்டுக்கல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

திண்டுக்கல் ஆர்.எம். காலனியைச் சேர்ந்தவர் 2005ஆம் ஆண்டு நடந்த கொலை வழக்கு ஒன்றில் நான்காவது குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ளார். இந்த வழக்கு விசாரணை திண்டுக்கல் நீதிமன்றத்தில் நடைபெறுகிறது.

இந்நிலையில், திண்டுக்கல் முருகபவனத்தைச் சேர்ந்த கார்த்திக்(32) என்பவர் தன்னை ஒரு வழக்கறிஞர் என உமையவனிடம் அறிமுகப்படுத்திக் கொண்டார். மேலும் வழக்கில் இருந்து சிவநாத்தை விடுவிக்க உதவுவதாகக் கூறி பல்வேறு கட்டமாக ரூ.43 இலட்சம் வரை ஏமாற்றி வாங்கி உள்ளார்.

ஒருகட்டத்தில் வழக்கில் இருந்து சிவநாத் விடுதலை செய்யப்பட்டதாகக் கூறி, விடுதலை அறிக்கை ஒன்றையும் மாவட்ட நீதிபதி கையெழுத்துடன் உமையன், சிவநாத் ஆகியோரிடம் கார்த்திக் வழங்கியுள்ளார்.

இதில் உமையனுக்கு சந்தேகம் வரவே, வேறு வழக்கறிஞர்களிடம் நீதிமன்ற உத்தரவை காட்டியுள்ளார். அப்போது நீதிபதி கையெழுத்தை போலியாகப் போட்டு விடுதலை அறிக்கை கொடுத்திருப்பதும், கார்த்திக் என்பவர் வழக்கறிஞரே இல்லை என்பதும் தெரியவந்தது.

லக்னோ

## விவசாயிகள் மீது கார் ஏற்றிய நபரை
## இதுவரை ஏன் கைது செய்யவில்லை?



போராட்டத்தில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் மீது பாரதிய ஜனதா தொண்டர்கள் வந்த கார் அணிவகுப்பு மோதி, பத்திரிகையாளர் உட்பட 9 பேர் பலியாகினர்.

விவசாயிகள் மீது,வேண்டுமென்றே காரை மோதியதாகவும், அந்த காரில் மத்திய அமைச்சரின் அஜய் மிஸ்ராவின் மகன் ஆஷிஷ் மிஸ்ரா இருந்ததாகவும் விவசாயிகள் கூறியுள்ளனர். அத்துடன் அவர் விவசாயிகள் மீது துப்பாக்கியால் சுட்டதாகவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். ஆனால் தனது மகன் அந்த காரில் இல்லை என மத்திய அமைச்சர் அஜய் மிஸ்ரா கூறியுள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக மத்திய அமைச்சர் அஜய் மிஸ்ரா மகனுக்கு எதிராக கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், விவசாயிகள் மீது கார் ஏற்றிய நபரை இதுவரை ஏன் கைது செய்யவில்லை என்று காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாக டுவிட்டரில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ள பிரியங்கா காந்தி அதில் கூறியிருப்பதாவது: - ‘எந்த உத்தரவும் எப்.ஐ.ஆரும் இன்றி கடந்த 28 மணி நேரமாக உங்கள் அரசு (பிரதமர் மோடி) என்னை தடுப்புக்காவலில் வைத்துள்ளது. லகிம்பூரில் விவசாயிகள் மீது கார் ஏற்றிய நபரை இதுவரை ஏன் கைது செய்யவில்லை?" எனக்கேள்வி எழுப்பியுள்ளார்.

உத்தர பிரதேசம்

## அமைச்சரின் மகனை கைது செய்யவும்



உத்தரப் பிரதேசம் மாநிலத்தின் லக்கிம்பூரில் விவசாயிகள் மீது காரினால் மோதி கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடைய மத்திய அமைச்சர் அஜய் மிஸ்ராவின் மகன் ஆஷிஸ் மிஸ்ராவை கைது செய்ய வேண்டும், முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் பதவி விலக வேண்டும் என்று விசிக தலைவர் தொல்.திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக தலைவர் தொல்.திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில், லக்கிம்பூரில் மத்திய உள்துறை இணை அமைச்சர் அஜய் மிஸ்ராவின் மகன், அஷிஸ் மிஸ்ரா, துணை முதலமைச்சர் கேசவ் மௌரியா பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக காரில் சென்றபோது அப்பகுதியைச் விவசாயிகள் அவர் வரும் வழியில் கறுப்புக்கொடி காட்டும் அறப்போரில் ஈடுபட்டுள்ளனர். காட்டுமிராண்டித்தனமாக அவர்கள் மீது தனது காரை மோதச் செய்ததில் அவ்விடத்திலேயே நான்கு விவசாயிகள் நசுங்கி உயிரிழந்துள்ளனர்.

புதுடெல்லி

## ‘எதற்கும் அஞ்சாதவர் பிரியங்கா’



உத்தரபிரதேசம் லக்கிம்பூரில் ஏற்பட்ட வன்முறையில் விவசாயிகள் 4 பேர் உள்பட 9 பேர் பலியாகினர். லகிம்பூர் வன்முறையில் உயிரிழந்த விவசாயிகளின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறுவதற்காக சென்ற காங்கிரஸ் பொது செயலாளர் பிரியங்கா காந்திக்கு அனுமதி மறுத்த பொலிஸார் அவரை தடுப்புக்காவலில் வைத்துள்ளனர்.

தன்னை 28 மணி நேரத்துக்கும் மேலாக எந்த உத்தரவும் இன்றி தடுப்புக்காவலில் வைத்திருப்பதாக பிரியங்கா காந்தி விமர்சித்துள்ளார்.

இதனிடையே, காங்கிரஸ் எம்.பி.ராகுல் காந்தி,தனது டுவிட்டர் பக்கத்தில் தனது சகோதரியும் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர்களில் ஒருவருமான பிரியங்கா காந்தி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளது குறித்து பதிவிட்டுள்ளார்.

## Carbon Neutral மற்றும் LEED Certification உடன் நிலைபேறாண்மையை நோக்கிய பயணத்துக்காக

# co-energi உடன் Ex-Pack கைகோர்ப்பு



co-energi பிரதம நிறைவேற்று அதிகாரி ஷாஹிட் சங்கானி (வலம்) மற்றும் Expack முகாமைத்துவ பணிப்பாளர் எம். கல்ஃபிகர் கௌஸ் ஆகியோர் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதுடன், அருகில் இரு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் காணப்படுகின்றனர்.

தமது வியாபார செயற்பாடுகளின் காரணமாக சூழலுக்கு ஏற்படக்கூடிய தாக்கத்தைக் குறைத்துக் கொள்ளும் வகையில், Aberdeen Holdings Pvt Ltd இன் துணை நிறுவனமும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்காக அலைவுநெளிவான பொதியிடல் தீர்வுகளை உற்பத்தி செய்யும் முன்னணி நிறுவனமுமான Expack Corrugated Cartons Ltd, co-energi உடன் கைகோர்த்துள்ளது.

நிலைபேறான மற்றும் வள வினைத்திறன் வாய்ந்த வடிவமைப்புகளை வழங்குவதில் சுயாதீன நிபுணத்துவ நிறுவனமாகத் திகழும் co-energi இனால், Expack இன் நிலைபேறாண்மை தொடர்பான பயணத்துக்கு உயர் உணர்திறன், புத்தாக்கம் மற்றும் சட்ட ரீதியில் ஏற்புடைய வழிமுறைகளை வழங்கி பங்களிப்புச் செய்யும்.

உற்பத்தித் துறையில் ஈடுபட்டுள்ளதுடன், பார இயந்திரங்களை பயன்படுத்துவது என்பதன் காரணமாக பரந்தளவு சூழலில் ஏற்படக்கூடிய தாக்கத்தை குறைத்துக் கொள்ளவது என்பது எப்போதும் சவால்கள் நிறைந்த விடயமாக அமைந்துள்ளது. எவ்வாறாயினும், நிலைபேறாண்மை மற்றும் தொடர்ச்சியான மேம்படுத்தல் பணிகளுக்கான தமது ஒப்பற்ற அர்ப்பணிப்பின் காரணமாக, Expack இனால் பல்வேறு வலுப் பாதுகாப்பு நிகழ்ச்சிகளை அர்த்தமுள்ள வகையில் முன்னெடுத்து சூழலுக்கு ஏற்படக்கூடிய தாக்கங்களை குறைத்துக் கொள்ள முடிந்துள்ளது.

> பங்காளராக கைகோர்த்து செயலாற்றும் பொறுப்பு வாய்ந்த கூட்டாண்மை நிறுவனமாகவும் அமைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டளவில் காபன் நடுநிலை நிறுவனமாக திகழ்வதற்கான உறுதியை நிறுவனம் கொண்டுள்ளது

Expack இன் தவிசாளர் சத்தார் காசிம் கருத்துத் தெரிவிக்கையில், சூழலை பாதுகாப்பதில் Expack தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், சப்புகஸ்கந்த பகுதியில் அமைந்துள்ள தமது தொழிற்சாலைக்கு LEED and Carbon Neutral Certification ஐ பெற்றுக் கொள்ளும் பணிகளை அண்மையில் ஆரம்பித்துள்ளது. இதனூடாக காலநிலை மாற்றம் மற்றும் உயிரியல் பரம்பலுக்கு எதிரான போராட்டத்தின் பிரதான பங்களிப்பு வழங்கும் பங்காளராக கைகோர்த்து செயலாற்றும் பொறுப்பு வாய்ந்த கூட்டாண்மை நிறுவனமாகவும் அமைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டளவில் காபன் நடுநிலை நிறுவனமாக திகழ்வதற்கான உறுதியை நிறுவனம் கொண்டுள்ளது.

> சூழல் பொறுப்புணர்வுடன் கட்டடங்களை வடிவமைத்து நிர்மாணித்தல் மற்றும் செயற்பாடுகளை ஒன்றிணைத்தல் போன்றவற்றுக்கு இது நிறுவனங்களுக்கு உதவுகின்றது

co-energi என்பது கட்டட பொறியியல் ஆலோசனை சேவைகளை வழங்கும் நிறுவனமாகும். "SMART DESIGN'' எனும் கொள்கையின் பிரகாரம் இதன் பெறுமதிகள் மற்றும் கொள்கைகள் போன்றன அமைந்துள்ளன. Green Building, MEP Design Consultancy மற்றும் Carbon Neutral Consultancy போன்றவற்றிலும் நிபுணத்துவம் பெற்றுள்ளது.

10 வருடங்களுக்கு மேலாக உயர் வினைத்திறன் வாய்ந்த AC கட்டமைப்புகள், rooftop solar designs, energy audits, MEP designs/ retro fittings போன்றவற்றை வடிவமைப்பதில் அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன், இலங்கையிலும் பங்களாதேஷிலும் 12 க்கும் அதிகமான LEED Certification களை எய்துவதற்கு பங்களிப்பு வழங்கியுள்ள co-energi, Expack நிறுவனத்துக்கு இந்தப் பயணத்தில் ஆதரவளிக்க முன்வந்துள்ளது.

Leadership in Energy and Environmental Design (LEED) என்பது உலகின் மிகச் சிறந்த Green Building Certification ஆக அமைந்துள்ளது. இதனை US Green Building Council வழங்குகின்றது. தொழிலாளர் சுகாதாரத்துக்கு மிகவும் குறைந்த தாக்கம் மற்றும் இயற்கை சூழலுக்கு குறைத்த பாதிப்பு மற்றும் செயலாற்றும் காலப்பகுதியில் உயர் வள வினைத்திறனை பெற்றுக் கொடுக்கக்கூடிய வகையில், சூழல் பொறுப்புணர்வுடன் கட்டடங்களை வடிவமைத்து நிர்மாணித்தல் மற்றும் செயற்பாடுகளை ஒன்றிணைத்தல் போன்றவற்றுக்கு இது நிறுவனங்களுக்கு உதவுகின்றது.

பிரித்தானியா

# தட்டுப்பாடுகளால் தள்ளாடும் பிரித்தானியா

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா விலகியதால் வெளிநாட்டவரை கனரக வாகனங்களின் சாரதிகளாக நியமிப்பதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அந்நாட்டில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான கனரக லொறிச் சாரதிகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.




இந்நிலையில் அங்கு பால், பெற்றோல், மருந்து, இறைச்சி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்வதில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை காரணமாக இப் பொருட்களுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து பெற்றோல் நிரப்பு நிலையங்களில் லொறிகளில் பெற்றோலை எடுத்து செல்லும் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் 10 நாட்களில்இந்நிலைமை சீராகும் என எதிர்பார்க்கப்படுவதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

செயலிகளின் முடக்கம்:

## 'மார்க்கின்' சொத்து மதிப்பில் வீழ்ச்சி




உலகம் முழுவதும் வட்ஸ் அப், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட செயலிகளை அதிகளவான மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் பேஸ்புக், வட்ஸ் அப் , இன்ஸ்டாகிராம் ஆகியன நேற்று முன்தினம்(4) இலங்கை நேரப்படி இரவு 9 மணிமுதல் திடீரென செயல்படாமல் முடங்கின. எனினும் சுமார் 7 மணி நேரத்திற்கு பிறகு இக் கோளாறு சரி செய்யப்பட்டது.

இப் பாதிப்பு உலகம் முழுவதும் ஏற்பட்டது. இதனால் அவற்றைப் பயன்படுத்தும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதன் காரணமாக பேஸ்புக் நிறுவனத்தின் ஸ்தாபகரும் , அந்நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியுமான மார்க் சக்கர்பெர்க்,7 பில்லியன் டொலர்கள் இழப்பைச் சந்தித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இதுகுறித்து விளக்கமளித்துள்ள பேஸ்புக் நிறுவனம் "எங்கள் பயன்பாடுகள் மற்றும் தயாரிப்புகளை அணுகுவதில் சிலருக்கு சிக்கல் இருப்பதை நாங்கள் அறிவோம்.

முடிந்தவரை விரைவாக இயல்பு நிலைக்கு திரும்புவதற்கு நாங்கள் பணியாற்றி வருகிறோம், மேலும் சிரமத்திற்கு மன்னிப்பு கோருகிறோம்" என்று தெரிவித்துள்ளது.



பிரித்தானியா

## டிக் டொக்கின் விளைவால்

காந்தங்களை உண்ட சிறுமி டிக்டொக்கின் பாவனையால் சிறுமியொருவர் 23 காந்தங்களை விழுங்கிய சம்பவம் பிரித்தானியாவில் இடம்பெற்றுள்ளது.

பிரித்தானியாவில் உள்ள சசெக்ஸ் பகுதியைச் சேர்ந்த 6 வயதுடைய சிறுமி, டிக்டொக்கில் ஒரு சவாலை மேற்கொண்டுள்ள நிலையில் அதற்காக, 23 காந்தங்களை ஒரே சமயத்தில் விழுங்கியுள்ளார்.

இதனால், சிறுமி வயிற்றுவலி, குமட்டல் மற்றும் வாந்தியால் அவதிப்பட்டுள்ளார். எனவே, சிறுமியின் பெற்றோர் உடனடியாக அருகில் இருந்த மருத்துவமனையில் அனுமதித்தனர்.

மருத்துவர்கள் சிறுமியை பரிசோதித்தனர். அதன்பின்பு, வயிற்றிலிருந்த காந்தங்களை அறுவை சிகிச்சை செய்து நீக்கியுள்ளனர். இருப்பினும் குடலுக்கு இடையில் காந்தங்கள் மாட்டிக் கொண்டதில் காயம் ஏற்பட்டிருக்கிறது.

சரியான நேரத்தில் சிறுமியை மருத்துவமனையில் அனுமதிக்கவில்லையெனில் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். எனினும், தற்போது பல முயற்சிகளுக்குப் பின்பே சிறுமி நன்றாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியம்

## லைகருடன் மல்லுக்கட்டிய யுவராஜ் சிங்

இந்திய கிரிக்கெட் வீரரான யுவராஜ்சிங் சமீபத்தில் டுபாயில் உள்ள Fame Park எனும் தனியார் உயிரியியல் பூங்காவிற்குச் சென்றிருந்தார்.

அங்கு ஒட்டகச் சிவிங்கி, கரடி மற்றும் பாம்பு போன்ற உயிரினங்களுக்கு உணவளித்து மகிழ்ந்த யுவராஜ் சிங் அவற்றுடன் புகைப்படங்களை எடுத்துக் கொண்டுள்ளார். அத்துடன் அங்கு 'ஆண் சிங்கம் மற்றும் பெண் புலியை வைத்து உருவாக்கப்பட்ட கலப்பினமான லைகருடன் கயிறு இழுக்கும் போட்டி யிலும் கலந்து கொண்டுள்ளார்.

ஒரு பக்கம் கயிற்றை லைகர் இழுக்க மற்றொரு பக்கம் கயிற்றை யுவராஜ் சிங் மற்றும் அவருடைய 2 நண்பர்கள் சேர்ந்து இழுத்துள்ளனர். எனினும் யுவராஜ் சிங்கின் குழுவானது லைகரிடம் தாக்குப்பிடிக்க முடியாமல் தோல்வியைத் தழுவியது.

இதுகுறித்து வெளியான வீடியோவானது தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.







ஸ்பெயினின்

## எரிமலை கக்குவதால் நிலநடுக்கங்கள் தொடர்கின்றன

ஸ்பெயினின் கனெரி தீவில் உள்ள லா பால்மா (La Palma) எரிமலை கடந்த மாதம் 19 ஆம் திகதி வெடிக்கத் தொடங்கிய நிலையில் கடந்த இரண்டு வார காலமாக தொடர்ந்து தீக்குழம்புகளை கக்குகிறது.

இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்டிடங்கள், பல ஏக்கர் நிலங்கள் மற்றும் 34 கிலோ மீற்றர் அளவிலான வீதிகளை எரிமலைக் குழம்பு மூழ்கடித்துள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் அப்பகுதிகளில் பல இடங்களில் அடிக்கடி நிலநடுக்கங்கள் ஏற்பட்டு வருவதால் அப்பகுதி மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த கெனரி தீவின் பிராந்தியத் தலைவர் ஏங்கல் வெக்டர் "எரிமலையின் சீற்றம் இன்னும் முடிவடையவில்லை. இது இன்னும் எவ்வளவு நேரம் நீடிக்கும் என்பது கூட எங்களுக்குத் தெரியாது. நாங்கள் இயற்கையின் கைகளில் இருக்கிறோம்" எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய அரபு இராச்சியம்

## முதலிடத்தைப் பிடித்த ஐக்கிய அரபு இராச்சியம்

உலகில் சக்தி வாய்ந்த கடவுச்சீட்டினைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் ஐக்கிய அரபு இராச்சியம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

அந்நாட்டின் கடவுச் சீட்டை வைத்திருப்பவர்கள் 152 நாடுகளுக்குச் சில சலுகைகளுடன் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். இதில் 98 நாடுகளுக்கு விசா இல்லாமலும், 54 நாடுகளுக்கு அங்கு சென்ற பின் விசா கொடுப்பதும், 46 நாடுகளுக்கு நுழைவதற்கு முன்பு விசா என்ற வசதியும் உள்ளது. இதற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில், நியூசிலாந்தின் கடவுச்சீட்டு உள்ளதோடு அந்த கடவுச் சீட்டை வைத்திருப்பவர்கள் 146 நாடுகளுக்குச் செல்லலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் மூன்றாவது இடத்தில், ஜேர்மனி, பின்லாந்து, ஒஸ்திரியா, லக்சம்பர்க், ஸ்பெயின், இத்தாலி, சுவிட்ஸர்லாந்து, தென் கொரியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் உள்ளன.

இதே போன்று உலகிலே மிகவும் வலிமை குறைந்த கடவுச்சீட்டாக ஆப்கானிஸ்தானின் கடவுச் சீட்டு உள்ளது. இதைத் தொடர்ந்து, ஈராக், சிரியா, பாகிஸ்தான், சோமாலியா, ஏமன், மியான்மார் ஆகிய நாடுகளின் கடவுச்சீட்டுக்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஐ.பி.எல்:



# சென்னையை வென்ற டெல்லி

இந்தியன் பிரீமியர் லீக்கில் (ஐ.பி. எல்), ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸுடனான போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட சென்னை, கட்டுக்கோப்பாக பந்துவீசிய அக்ஸர் பட்டேல் (2), அன்றிச் நொர்ட்ஜே (1), இரவிச்சந்திரன் அஷ்வின் (1), ஆவேஷ் கான் (1), ககிஸோ றபாடாவிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது. அம்பாதி ராயுடு மாத்திரம் தனித்துப் போராடி ஆட்டமிழக்காமல் 55 (43) ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

பதிலுக்கு, 137 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய டெல்லி, தீபக் சஹர் (1), ஜொஷ் ஹேசில் வூட் (1), ஷர்துல் தாக்கூர் (2), இரவீந்திர ஜடேஜாவிடம் (2) குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளைப் பறிகொடுத்தபோதும், ஷிகர் தவானின் 39 (35), ஷிம்ரோன் ஹெட்மயரின் ஆட்டமிழக்காத 28 (18) ஓட்டங்களோடு 19.4 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கை அடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக அக்ஸர் பட்டேல் தெரிவானார்.

தெற்காசிய கால்பந்தாட்ட சம்பியன்ஷிப்:

## நேபாளத்திடம் தோற்ற இலங்கை

தெற்காசிய கால்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரில், மாலைதீவுகளில் நேற்று முன்தினமிரவு நேபாளத்துடனான போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் இலங்கை தோற்றது. இலங்கை சார்பாக, மர்வின் ஹமில்டன், டிலன் டீ சில்வா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். நேபாளம் சார்பாக, சுமன் லாமா, அஞ்சன் பிஸ்தா, அயுஷ் குலான் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.






## ஆஷஸ் தொடர் நிறுத்தப்படுகிறதா?

ஆஷஸ் தொடர் நடைபெற முடியுமா எனத் தீர்மானிப்பதற்காக இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் பணிப்பாளர் சபை இவ்வாரம் சந்திக்கவுள்ளது.

இங்கிலாந்தின் சில முன்னணி வீரர்கள் அவுஸ்திரேலியாவின் கடுமையான கொரோனாக் கட்டுப்பாடுகளுக்குத் தயாரில்லை என்பதை இங்கிலாந்து கிரிக்கெட் சபை ஏற்றுக் கொள்கின்றது எனத் தோன்றுகின்ற நிலையிலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது.

பெரிய கல்லாறு பொது மைதானத்தினுள்

## 'கடினபந்து விளையாட்டை இடைநிறுத்துக'

வ. சக்தி

பெரிய கல்லாறு பொது மைதானத்தினுள் கடினபந்து விளையாடுவ தற்காலிகமாக இடைநிறுத்தமாறு மண்முனை தென் எரு வில் பற்று பி ரதேச சபையின் தவிசா ளர் ஞானமுத்து யோகநாதன் தமக்கு கடிதம் மூலம் அ றிவித்துள்ளதாக பெரியகல்லாற்றில் அமைந்துள்ள c விளையாட்டுக் கழ கத்தினர் தெரிவித்துள்ளனர்.

கல்லாறு மத்திய விளையா ட்டு க் கழகம், கல்லாறு விளையாட்டு கழகம் , ஸ்ரார் விளயாட்டு க் கழகம், ஒலிம்பியா விளையா ட்டு க் கழகம் வலம்புரி விளையாட்டுக் கழகம், John de Britto Sports Club, Spider Sports Club Butte rfly Sports Club, ஆகியோ ரு க்கு இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

"மேற்படி விடயம் தொடர்பா க பெரியகல்லாறு பொது மக்கள் மற்றும் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை ஆகியோரால் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பாகவும், மண்மு னை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தின் விளையாட்டு உத்தியோ கத்தரின் அறிக்கைக்கு அமைவாகவும், 23.09.2021ஆ ம் திகதி நடைபெற்ற எமது சபைக்கூட்டத்தில் இது ன்றது என்பதனை அறி யத் தருகிறேன்.

மைதானத்தின் அள வு குறைவாக காணப்படு வதனால் மைதானத்தின் மத்தி யில் கடினபந்து விளையாடுவதை தற்காலிகமாக இடைநிறுத்தும்படி தெரிவிப்பதுடன் வலைக் கூட்டுக்குள் பயிற்சியில் ஈடுபட லாம் என்பத னையும் தெரிவித்துக் கொள்கி றேன்" எனக் கூறப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள், உள்ளூராட்சி ஆணையாளர் கி ழக்கு மாகாணம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மட்டக்களப்பு, பிரதே யலாளர், மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி, ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயபரிபாலன சபை, கல்லாறு, விளை யாட்டு உத்தியோகத்தர் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகம், அபி விருத்தி உத்தியோகத்தர் (இந்து கலாச்சாரம்), மண்முனை தென் எருவில் பற்று, த.புவனேந்திரராசா, பொ து மைதான வீதி , கல்லாறு ஆ யோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் தா ம் இந்த மைதா னத்தில் மிக நீ ண்ட கா கவிருந்து கடினபந்து விளை டி வருவ தை தற்போது தடைசெய்ய ப்பட்டுள்ளமை தமக்கு மிகுந்த வேதனைய ளிப்பதா கவும், இது த மது விளையாட்டின் முன்னேற்றத்திற்கு பெரும் தடையாக அமைந்து ள்ளதாகவும், பெறி யகல்லாறு கிரா மத்தில் அமைந்துள்ள விளை யாட்டுக் கழகத்தினர் தெ ரிவிக்கின்றனர்.

பரிஸ் ஸா ஜெர்மைனில் தொடருவதை

## நிராகரிக்காத மப்பே



பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முன்களவீரரான கிலியான் மப்பே, தனது ஒப்பந்தம் இப்பருவகாலத்தில் முடியும்போது கழகத்தை விட்டு வெளியேறுவேன் எனத் தெரிவித்திருக்கவில்லை.

கடந்த பருவகால முடிவில் ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்றிட்டில் இணைய விரும்புவதாக 22 வயதான மப்பே தெரிவித்த நிலையில், றியல் மட்றிட்டின் கோரிக்கைகளை பரிஸ் ஸா ஜெர்மைன் நிராகரிக்கவில்லை.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 06 ஒக்டோபர் 2021, இல. 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.